இலவசப் பிரதி
Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

IIS
புலமைப்பரிசில் திட்டம் 2004
கல்வியாண்டு 2004/2005 இல் புலமைப்பரிசில் திட்டம் 2004 இன் ஊடாக எமது நிறுவனத்தில் கல்வி பயிலவிரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்ப முடிவு திகதி : 15.11.2003
விண்ணப்பப் படிவங்களினை IIS அலுவலகங்களிலும் குடாநாட்டின் அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஐப்பசி 08 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷஃபான் 28 (25.10.2003) சனிக்கிழமை இதழ்:25

# புலிகள் மீதான தடையினை நீக்குமாறு அமெரிக்காவை நோர்வே கோரவில்லை!

## யாழ்., கொழும்பு தினசரிகளின் செய்தியை மறுக்கிறார் சொல்ஹெய்ம்

(ஒஸ்லோ)

விடுதலைப் புலிகள் அமைப்பு மீது அமெரிக்காவில் விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவது தொடர்பான விவகாரத்தில் - நோர்வே தலையீடு செய்யவிரும்பவில்லை என்றும், கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் தமிழ் தினசரிகள் வெளியிட்ட தகவல்கள் தவறானவை என்றும், நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

புலிகள் மீதான தடையை நீக்கும்படி நோர்வே சார்பில் பரிந்துரைக்கும் நோக்கில் எரிக் சொல்ஹெய்ம் அமெரிக்காவுக்குச் செல்லவுள்ளதாக கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் தமிழ் தினசரிகள் செய்தி வெளியிட்டிருந்தன.

சில நாட்களுக்கு முன்னர் வெளியான இந்தத் தகவல்கள், முற்றிலும் தவறானவை என, சொல்ஹெய்ம் மறுத்துள்ளார். அத்துடன், இலங்கையின் சமாதான முயற்சிகளில் மட்டுமே நோர்வே ஈடுபட்டுள்ளது. ஆனால், ஏனைய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையீடுசெய்ய, நோர்வே விரும்பவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சமாதானத்துக்கு எதிரான நேற்றைய பேரணியில் ஒரு லட்சத்துக்கும் குறைவானோரே பங்கேற்பு!

## சந்திரிகாவும் கலந்துகொள்ளவில்லை

(கொழும்பு)

**அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கைகளைக் கண்டித்து, சிறிலங்கா சுதந்திரக் கட்சியால் ஒழுங்குசெய்யப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியில் - பத்து லட்சம் பேரைத் திரட்ட ஏற்பாட்டாளர்கள் திட்டமிட்டிருந்த போதிலும் - ஒரு லட்சத்துக்கும் குறைவானோரே பங்கேற்றனர். இதனால், சமாதான முயற்சிகளைக் குழப்பும் ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான சுதந்திரக் கட்சியின் திட்டம் பிசுபிசுபித்துப் போயுள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.**

பிற்பகல் 1.30 மணியளவில் சுகததாஸ விளையாட்டரங்கு, கோட்டை பொதுவிளையாட்டு மைதானம், பம்பலப்பிட்டி, பொரளை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம் ஆகிய இடங்களிலிருந்து ஆரம்பமான ஆர்ப்பாட்டப் பேரணிகள் கொழும்பு நகரசபை மண்டபத்தைச் சென்றடைந்தன.

அங்கு எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில், எதிர்ப்புக்கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், ஜனாதிபதியின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர், ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச, நாடாளுமன்ற உறுப்பினர் அநுரா திஸாநாயக்க, அநுரா பண்டாரநாயக்க, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம, அனுருத்த

(10 ஆம் பக்கம் பார்க்க)





நேற்றைய பேரணியில் ஆக்ரோஷமாக கோஷம் எழுப்பும் எதிக்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை முதலாவது படத்திலும், பேரணியில் கலந்துகொண்டோரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# சமாதான நடவடிக்கையால் நாடு இரண்டாக பிளவுபடும்!

## எச்சரிக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

அரசு மேற்கொண்டுவரும் சமாதான நடவடிக்கையால், நாடு இரண்டாகப் பிளவுபடக்கூடிய ஆபத்திருப்பதாக, ஜனாதிபதி தெரிவித்தார்.

கொழும்பு மாநகரசபை வளவில் நடைபெற்ற, பொதுக்கூட்டத்துக்கு ஜனாதிபதி அனுப்பிவைத்த செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டில் தன்னால் ஆரம்பிக்கப்பட்ட சமாதானத் திட்டத்துக்கு, அரசியல் ஆதரவு கிடைத்திருக்குமாயின் விடுதலைப் புலிகள் இவ்வாறு, அனுகூலமான நிலையில் இருக்கமாட்டார்கள் எனவும் தெரி



(10 ஆம் பக்கம் பார்க்க)

# கிண்ணியாவில் பதற்றம் நீடிப்பு; மீண்டும் ஊரடங்குச் சட்டம் அமுல்!

(திருகோணமலை)

நேற்று இடம்பெற்ற சம்பவத்தையடுத்து கிண்ணியா பிரதேசத்தில் அமுல்படுத்தப்பட்ட பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை 10 மணிக்கு தளர்த்தப்பட்டபோது, கிளர்ச்சிக்காரர்கள் வீதிகளில் காணப்பட்டதால், மீண்டும் மாலை 2 மணிக்கு ஊரடங்கு அமுலுக்கு கொண்டுவரப்பட்டதாக கிழக்குப் பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் நெவில் விஜயசிங்க தெரிவித்தார்.

இதேவேளை - கிண்ணியாவில் இடம்பெற்ற பிந்திய அசம்பாவிதங்களுக்கு சில முஸ்லிம் காடையர்களே காரணமாக இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கிண்ணியாவில் நேற்றுமுந்தினம் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களுடன் தொடர்புடையதாக இந்த முஸ்லிம் நபர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும் அவர்களைக கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

இந்த நபர்கள் கிண்ணியா பிரதேசத்தில் உள்ள முக்கிய முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவரின் வீடுகளையும் சேதமாக்கியதாகவும் அவர் கூறினார். திருகோணமலை தொகுதி உறுப்பினர்களான

(10 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். வந்த குன்னக்குடி குழுவினர் பலாலியில் படையினரால் அவமதிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு இந்துகலாசார அமைச்சினால் விசேடமாக அழைத்துவரப்பட்ட குன்னக்குடி வைத்தியநாதன் குழுவினர் நேற்று பலாலியில் படையினரால் தரக்குறைவாக நடத்தப்பட்டதாக இசை ஆர்வலர்கள் விசனம் தெரிவித்தனர்.

நேற்றையதினம் விமானமூலம் பலாலி வந்த இவரை பலாலியிலுள்ள விருந்தினர் பாதையூடாக யாழ்.நகருக்கு வரவிடாது, பொது மக்கள் பயன்படுத்தும் தற்காலிக பாதையூடாகச் செல்லாம் எனப் படைத்தரப்பு தெரிவித்தது.

அங்குநின்ற அமைச்சர் மகேஸ்வரன் வைத்தியநாதன் குழுவினரை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்தும் பலாலி விமானநிலையத்திற்கு முன்னால் உள்ள பலாலி வீதியூடாக அழைத்துவர முற்பட்டார்.

அமைச்சரின் இந்த நடவடிக்கையை மறுத்த படை அதிகாரிகளுக்கும் அமைச்சருக்கும் இடையே காரசாரமான விவாதம் நடைபெற்ற போதும் படை அதிகாரிகள் தமது முடிவை மாற்றிக்கொள்ளாததால் பொதுமக்கள் பயன்படுத்தும் தற்காலிக பாதையூடாகவே இவர்கள் அழைத்துவரப்பட்டனர். (202)

## ஐ.ரீ.என் தொலைக்காட்சி நிறுவனத்திடம்

# கிழக்கு பிராந்திய கடற்படைத் தளபதி 150 மில்லியன் நட்டஈடு கோருகிறார்

(கொழும்பு)

கிழக்குப் பிராந்திய தளபதி றியர் அட்மிரல் வசந்த கரன்னகொட, சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்திடம் 150 மில்லியன் ரூபா, நஷ்ட ஈடு கோரி, நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

கடந்த செப்ரம்பர் 5 ஆம் திகதி சுயாதீன தொலைக்காட்சியில் ஒளி பரப்பான பாதுகாப்பு நிலவரம் என்ற நிகழ்ச்சியில் - தனது தனிப்பட்ட புகழுக்கும், கடற்படையின் மூன்றாவது நிலை அதிகாரி என்ற பதவிக்கும் இழுக்கு ஏற்படுத்துவதாகக் கூறியே, இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

தான் 33 ஆண்டுகளாக பணியாற்றுவதாக கூறிய அவர், குறிப்பிட்ட நிகழ்ச்சியில் பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அத்துடன் - தேசியப் பாதுகாப்பு தொடர்பாக புலிகளுக்கு வழங்கப்பட்டிருப்பதாக இந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## வறிய மக்களுக்கு வீடுகள் அமைப்பு

(புன்னாலைக்கட்டுவன்)

திடற்புலம் பிரதேசத்தில் இந்து சமய விவகார அமைச்சினால், நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்கள் மற்றும் நிரந்தர வீடுகள் இல்லாத குடும்பங்களை இனங்கண்டு, முதல் கட்டமாக 10 குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இந்தப் பிரதேசத்தில் வாழுகின்ற மக்களின் பெரும்பாலான குடும்பங்கள் தற்காலிக குடிசைகளில் வாழ்ந்து வருவதும், மலசல கூட வசதிகள் இல்லாது, இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (83)

## கரம், சதுரங்கப் போட்டிகளில் வெற்றியீட்டியோர் விபரம்

கடந்த புதன், வியாழக்கிழமைகளில் நடத்திய கரம், சதுரங்கப் போட்டிகள், மானிப்பாய் மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. இதில் வெற்றியீட்டியவர்களின் விபரம் வருமாறு-

**சதுரங்கம்**

**ஆண்கள்**

எஸ்.கஜந்தன் (சண்டிலிப்பாய் . இந்துக் கல்லூரி), எ.ஹரிகரன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), வி.திவாகர் (மானிப்பாய் இந்துக் கல்லூரி).

**பெண்கள்**

ஆர்.இசைவாணி(மானிப்பாய் மகளிர் கல்லூரி), ஆர்.கலைவாணி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), எஸ். ராதிகா(மானிப்பாய் மகளிர் கல்லூரி).

**கரம்**

**ஆண்கள**

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி,மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

**பெண்கள்**

மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய் சென்.ஆனஸ் றோ.க.த பாடசாலை

மேற்படி போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு - பெறுமதியான பரிசில்களும், சான்றிகழ்களும் வழங்கப்படவுள்ளன. (91)



பருத்தித்துறை - முனைப்பகுதியில் படையினரால் சேதமாக்கப்பட்ட மீனவர்களின் படகுகளை படங்களில் காணலாம்.

## பெரும்போகச் செய்கைக்கான

# விதை கிழங்கு விநியோகத்தில் இம்முறை தனியார் வர்த்தகர்கள்

(புன்னாலைக்கட்டுவன்)

இந்த வருட பெரும்போக செய்கைக்கு வேண்டிய விதை உருளைக் கிழங்கு தனியார் வர்த்தக நிறுவனங்களினால் விவசாயிகளுக்கு வழங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

சுன்னாகம் கமக்காரர் மாளிகையில் புன்னாலைக்கட்டுவன், குப்பிளான் மற்றும் ஈவினைப் பிரதேச விவசாயிகள் கூடுதலான அளவு விதை உருளைக்கிழங்கினை கொள்வனவு செய்து கொண்டு செல்கின்றமையைக் காணமுடிகிறது.

கடந்த வருட பெரும் போகச்செய்கைக்கு தேவையான விதை உருளைக்கிழங்கை உடுவில் கமநல சேவை நிலையமும், கமக்காரர் மாளிகையும் கொள்வனவு செய்து, விவசாயிகளுக்கு வழங்கின. ஆனால், இந்த வருடம் கமக்காரர் மாளிகை மட்டுமே வழங்குகிறது.

இதற்கு கமநல சேவை நிலையத்தால், அறுவடைக் காலத்தில் கொழும்பிலிருந்து இறக்குமதியாகும், உருளைக்கிழங்கை கட்டுபடுத்த முடியாமல் இருப்பதனாலேயே, இந்த வருட விதைக்கிழங்கை கொள்வனவு செய்து வழங்கவில்லை எனத் தெரிய வருகிறது.

மேலும், கடந்த வருடம் ஒரு பெட்டி உருளைகிழங்கு 4300 ரூபாவிற்கு வழங்கப்பட்டது என்றும், இந்த வருடம் 4900 ரூபாவிற்கு வழங்கப்படுவதாகவும் கூறுப்படுகிறது.

அத்துடன், கண்டி வீதி திறக்கப்பட்டு, போக்குவரத்து ஓரளவிற்கு சுமுகமாக நடைபெறுகின்ற வேளையில், கடந்த வருடத்தை விட, ஒரு பெட்டிக்கு - 600 ரூபா கூடுதலாக அறவிடப்படுவதனால், விவசாயிகள் பலர் அதிருப்தியடைந்துள்ளனர்.

அண்மையில் உடுவில் கமநல சேவை நிலையத்தில், இடம்பெற்ற விசேட பொதுக்கூட்டத்தில் இந்தப் பகுதி விவசாய சம்மேளன உறுப்பினர்கள் கமநல சேவை நிலையத்தினூடாகவே, விதை உருளைக் கிழங்கைப் பெற்றுத்தருமாறு, உடுவில் கமநல சேவை நிலையம் பெரும்போக உத்தியோகத்தரிடம் கோரிக்கை விடுத்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (83)

## உரும்பிராய் இந்துக் கல்லூரியின்

# சஞ்சிகை வெளியீடும் நூலக வார விழாவும்!

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் இந்துக் கல்லூரியில் வித்தியா சஞ்சிகை வெளியீடும், பாடசாலை ஒலி,ஒளி கலையரங்கத் திறப்பு விழாவும், நூலக வார விழாவும் நாளை மறுதினம் 2.30 மணிக்கு, கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் - யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி இ.சிவ ஞானசுந்தரம் சிறப்பு விருந்தினராகவும், வலி.கிழக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் எஸ்யாழவன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## பனை, தென்னை வள அபிவிருத்தி சங்கங்களின்

# 30 ஆண்டு நிறைவுவிழா மலர் வெளியீடு இன்று கிளிநொச்சியில் நடைபெறும்!

(யாழ்ப்பாணம்)

பனை,தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் 30 ஆவது, ஆண்டு நிறைவு விழா மலர் வெளியீடும், கருத்தமர்வும் - இன்றும், நாளையும் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

வடமாகாண பனை,தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம் நடாத்தும், பனை தென்னை வள மேம்பாட்டுக் கருத்தமர்வு - இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது.

இன்று நடைபெறும் நிகழ்வு, வடக்கு - கிழக்கு மாகாண ஆணையாளர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெறும்.

நாளை நடைபெறும் கருத்தமர்வு, முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தி.சபாரட்ணம் தலைமையில் இடம்பெறும்.

இருநாள் செயலமர்விலும் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் சிறப்புரையாற்றவுள்ளனர்.

கூட்டுறவுச்சங்கங்களின் முப்பதாவது ஆண்டு நிறைவையொட்டிய மலர் வெளியீடு, இன்றுமாலை 5 மணியளவில் த.சிவயோகராஜா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் - வெளியீட்டுரையை நிலாந்தனும், தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வி.இளங்குமரன், வே.பாலகுமாரன் ஆகியோர் சிறப்புரையையும் நிகழ்த்துவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

THE ROYAL COLLEGE OF JAFFNA

ஆண்டு 1இல் இருந்து மேற்படிப்பு வரை சிறந்த ஆசிரியர்கள், சகல பாடங்கள்

426 (302), K.K.S Road Jaffna

(சி/ 1636)

நிறஞ்சனாஸ் சங்கானை

ஜீவா, ஸ்ரீதேவி நடித்த

தித்திக்குதே

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

T.TOX

(சி-1618)

ராஜா யாழ்ப்பாணம்.

பிதாமகன்

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30 (பு.நே)

ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(சி-1619)

நமது ஈழநாடு நடாத்தும்

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான இலவச முன்னோடிக் கருத்தரங்கு 2003

விபரங்கள் வெகுவிரைவில் நமது ஈழநாடு நாளிதழில் வெளிவரும்.

அனுசரணை வழங்குவோர்

ஹரிஹரனன் பிறிண்டேர்ஸ்

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

SEYLAN BANK LIMITED

செலான் வங்கி

டிக்கிரி கணக்கு

புதிதாக டிக்கிரிக் கணக்கு ஆரம்பிக்க விரும்புபவர்கள் கருத்தரங்கு மண்டத்தில் ஆகக்குறைந்தது 100 ரூபா செலுத்தி ஆரம்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி தேசத்தின் வங்கியாளர்

# அரசு ஊழியரின் சம்பளத்தை ஐம்பது வீதத்தால் உயர்த்தவும்

## ஜனாதிபதி அரசிற்கு உத்தரவு

அரச ஊழியர்களுக்கான சம்பளத்தினை ஜம்பது வீதத்தால் உயர்த்துமாறு ஜனாதிபதி சந்திரிகா - அரசாங்கத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஜூலை 18 ஆம் திகதி, தன்னால் இது தொடர்பாக அரசிற்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இந்த உத்தரவு தொடர்பாகக் கருத்து தெரிவித்த நிதியமைச்சர் கே.என் சொக்ஸி - இது தொடர்பாக திறைசேரிக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகவும்,

வரவு - செலவுத் திட்டடத்திற்கு முன், அவர்கள் இது தொடர்பாக அரசிற்குக் விபரங்களை தருவார்களெனவும், அதன்பின் அரச ஊழியருக்கான சம்பளங்கள் அதிகரிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

(01)

# மீண்டும் புலிகள் யுத்தத்தை ஆரம்பிக்க மாட்டார்கள்

## இந்தியா நம்புவதாக ரணில் கூறுகின்றார்

விடுதலைப் புலிகள் மீண்டும் ஒரு யுத்தத்திற்குச் செல்லமாட்டார்கள் என்பதை இந்தியத் தலைவர்கள் தன்னிடம் தெரிவித்துள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்திற்கு முனனதாக இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் மீண்டும் ஒரு யுத்தத்தில் ஈடுபடமாட்டார்கள் என்பதையும், சமாதானப் பேச்சுக்களில் அவர்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளார்கள் என்பதனையும் அரசு நன்றாகப் புரிந்து வைத்திருப்பதாகவும் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

விடுதலைப் புலிகள் மீண்டும் ஒரு யுத்தத்தை ஆரம்பிக்க மாட்டார்கள் என்பதைப் புலனாய்வுத் தகவல்கள்மூலம் உறுதிப்படுத்தியுள்ளதாகவும், இந்தியத் தலைவர்கள் தன்னிடம் தெரிவித்துள்ளனர் என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாகப் பேச்சிலும், அது தொடர்பான



திட்டநகல் ஒன்றையும் சமர்ப்பிக்கவுள்ள விடுதலைப் புலிகள், மீண்டும் யுத்தத்தைத் ஆரம்பிக்க மாட்டார்கள் என்று தெளிவாகத் தெரிவதாகவும் பிரதமர் மேலும் கூறினார்.

# சமாதான முயற்சிகளில் பங்கேற்க இந்தியா ஆலோசித்து வருகின்றது

## நாடாளுமன்ற அமைச்சர் ரிரோன் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான இராணுவ ஒத்தழைப்புக்கள் விரிவுபடுத்தப்படவுள்ளது. இந்த இராணுவ ஒத்துழைப்பு விரிவாக்கல் திட்டத்தினுள், இலங்கைப் படையினருக்கான ஆயுத தளபாடங்களை விநியோகம் செய்யும் நடவடிக்கையும் உள்ளடங்குவதாக வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரைநிகழ்த்திய வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ தெரிவித்தாவது -

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயம் - இலங்கையின் வெளியுறவு, பொருளாதார மற்றும் தேசிய பாதுகாப்பு விடயங்களில் ஒரு திருப்புமுனையாக அமைந்துள்ளதாக அரசாங்கம் கருதுகின்றது.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் முழுமையான பங்களிப்பை வழங்குவது குறித்து இந்தியா ஆலோசித்து வருகிறது.

அத்துடன், இலங்கையின் பாதுகாப்பு, ஐக்கியம், பிராந்திய ஒருமைப்பாடு ஆகிய விடயங்களைப்



பேணுவதில், இந்தியா நிரந்தரமான அக்கறை செலுத்திவரும் என்றும் வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது என்றும் ரிரோன் பெர்னான்டோ மேலும் தெரிவித்தார்.

# இராணுவ கடேற் அதிகாரி விஷம் அருந்தி தற்கொலை

தியத்தலாவ இராணுவப் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி மேற்கொண்டிருந்த இராணுவ கடேற் அதிகாரி ஒருவர், விஷம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார். பன்னிப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த விபுலரங்கன மகாரச்சி என்ற இராணுவ கடேற் அதிகாரியே இவர் விஷம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

8 மாத காலமாகப் பயிற்சி பெறும் இவர், லீவு எடுத்துக்கொண்டு பண்டாரவளைக்குச் சென்றவர், பின்பு இரவு 7.30. மணியளவில் தியத்தலாவ இராணுவப் பயிற்சி முகாமுக்கு வந்து விஷமருந்தினார் என்றும், பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. பயிற்சி இடம் பெற்றபோது, ஏற்பட்ட சம்பவத்தால் தனது மகன் விஷமருந்தித் தற்கொலை செய்துகொண்டதாக இந்த இராணுவ அதிகாரியின் பெற்றோர்கள் தெரிவித்தனர்.

# கண்காணிப்புக்குழுவின் பிரதித்தலைவர் யாழ்.அரசியற்துறையினருடன் சந்திப்பு!

## குடாநாட்டின் நிலவரங்களை கேட்டறிந்தார்

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறை துணை பொறுப்பாளர் செம்மணனுக்கும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதித்தலைவர் ஹக்ர.்.ஹொக்லனடுக்கும் இடையில், நேற்றுமுன்தினம் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறை அலுவலகத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பு - நேற்றுமுன்தினம் மாலை 3 மணிதொடக்கம் 4 மணிவரை இடம்பெற்றது. இதில், குடாநாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாகக் கண்காணிப்புக்குழுவின் பிரதித்தலைவர் கேட்டறிந்து கொண்டார்.

இந்தச் சந்திப்பில் - கண்காணிப்புக்குழுவின் பிரதித்தலைவரிடம்- கடந்த ஒரு மாதமாக இராணுவத்தால் - மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாகச் செம்மணன் விளக்கிக் கூறினார்.

பாடசாலைகளுக்கு அருகிலுள்ள காவலரண்களை அகற்றி, மாணவர்கள் சுமுகமான கல்வியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டுமெனச் செம்மணன் கேட்டுக் கொண்டார். இது பற்றி கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர், தான் உரியவர்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்.

முன்னதாக யாழ்.வந்த கண்காணிப்புக்குழுவின் தலைவர் - யாழ். மாவட்ட இராணுவத் தளபதி சரத்பொன்சேகா, யாழ்.மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி ஹரல் அன்ரனியையும் சந்தித்து குடாநாட்டு நிலைமைகள் தொடர்பாக கேட்டறிந்தமை குறிப்பிடத்தக்கது.



# இந்திய இராணுவத் தளபதியை ஒஸ்ரின் பெர்னாண்டோ சந்திப்பு

உத்தியோகபூர்வ விஜயமாகக் கொழும்பு வந்துள்ள இந்திய இராவணுத்தின் தென்பிராந்தியத் தளபதி லெப்.ஜெனரல் குருபக்கிஸ் சிகோடா- பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவைச் சந்தித்து பேச்சு நடத்தினர். நேற்றுமுன்தினம் இராணுவத் தலைமையகத்திற்கு விஜயம் செய்த பின்னர், பாதுகாப்பு அமைச்சு அலுவலகத்திற்கும் இவர் விஜயம் செய்தார். அவர் அங்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுடன் பேச்சுக்களை நடத்தினார். இந்தப் பேச்சுக்களின்போது, இரு தரப்பு இராணுவ ஒத்துழைப்புக்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, இராணுவத் தலமையகத்திற்கு - இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் குருபக் சிகோடாவை - இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல வரவேற்றுள்ளார்.

# விடுதலைப் புலிகளின் திட்டவரைபு கிடைத்ததும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அரசு நோர்வேக்குத் தெரிவிப்பு

வடக்கு - கிழக்கிற்கான விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்த யோசனைகள் கிடைத்ததும், நேரடிப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு, அரசாங்கம் - நோர்வே தலைமைப் பீடத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

விடுதலைப் புலிகளின் யோசனைகள், எதிர்வரும் 31 ஆம் திகதி நோர்வே இராஜதந்திரிகள் ஊடாக அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதன் பின்னர், அடுத்த மாதமளவில் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கலாம் என்று அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றக்கூட்டத்தில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தப் பேச்சுக்களில் முஸ்லிம்களின் பிரச்சினை பற்றிக் கலந்துரையாட விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் இதுவொரு முக்கிய திருப்புமுனையாகும்.

இலங்கையின் சமாதான முயற்சிகளைத் தவறாகச் சித்தரிக்க முனையும் எதிர்க்கட்சியின் சதித் திட்டத்தினை, இந்தியா புறக்கணித்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

சமாதான முயற்சிகள் இந்தியாவுக்கு பாதமாக முன்னெடுத்துச் செல்லப்படுவதாகச் சித்தரிப்பதற்கு, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் முயற்சி செய்தார்கள். அதனையும் இந்தியா அதிருத்தியோடு நோக்குகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# பொலிஸ் திணைக்களத்தை மறுசீரமைக்க இந்தியா உதவிவழங்கத் தயாராகவுள்ளது

## அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கு, இந்தியா உதவி வழங்கத் தயாராக இருப்பதாகவும், இந்த உதவிகள் இலங்கைக்கான பாதுகாப்பு உதவி அதிகரிப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் என்றும் நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது, இரு நாட்டு பொலிஸ் திணைக்களங்களும் மிகவும் நெருங்கிப் பணியாற்ற, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தின்போது முடிவுசெய்யப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாட்டுக்கமைய, இலங்கைப் படையினருக்கான பயிற்சிகளை அடுத்துவரும் மாதங்களில் இரட்டிப்பாக அதிகரிக்க இந்தியா தீர்மானித்துள்ளது எனத் தெரிவித்தார்.

# எதிர்க்கட்சித் தலைவரின் பேச்சை இடைமறித்துப் பேசிய மங்கள சமரவீர

(கொழும்பு)

கடந்த திங்கட்கிழமை மாத்தளை - தொட்டுவேகொட பகுதியில் எதிர்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ உரையாற்றிக் கொண்டிருந்தவேளை, அவரது பேச்சை இடைமறித்த மங்கள சமரவீர - தற்போது ஜே.வி.பியுடனான உடன்படிக்கை எந்த நிலையிலுள்ளதெனக் கேட்டுள்ளார்

அதன்பின்னர், மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்து உரையாற்றியபோது, அங்கு குழுமியிருந்த மக்கள் சுதந்திரக்கட்சியினதும், ஜே.வி.பியினதும் உடன்படிக்கையின் முன்னேற்றம் தொடர்பாகக் கேட்டனர்.

எதிர் கட்சித்தலைவர் தனக்கு இதுபற்றி ஒன்றும் தெரியாதென அங்கு கூடியிருந்த மக்களிடம் தெரிவித்தார்.

பின்னர், எதிர்கட்சித் தலைவர்- நாடாளுமன்ற உறுப்பினர் சமரவீரவினை அழைத்து இருகட்சிக்குமிடையேயான உடன்படிக்கை தொடர்பாக உரையாற்றுமாறு தெரிவித்தார்.

அத்துடன், மகிந்த ராஜபக்ஷ தனது பேச்சினை நிறுத்தி, இருகட்சிக்குமிடையேயான புதிய உடன்படிக்கை தொடர்பாகக் கலந்துரையாட, மங்கள சமரவீரவினை அழைத்தார்.

இந்தப் பொதுக்கூட்டத்தில் சுதந்திரக்கட்சியினைச் சேர்ந்த அனுருத்த ரத்வத்தை, ஜே.வி.பி. பிரசார செயலாளர் விமல் வீரவன்ச உட்பட சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

# குடாநாட்டின் சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபடுவது ஏற்புடையதல்ல!

## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர்

(யாழ்ப்பாணம்)

"யாழ்.குடாநாட்டின் சிவில் நிர்வாக நடவடிக்கைளில், இராணுவத்தரப்பு தொடர்ந்தும் ஈடுபடுவது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல" என, மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலக இணைப்பாளர் பி.றுவன் சந்திரசேகர தெரிவித்தார்.

பருத்தித்துறை முனைப்பகுதியில் படையினரால் - பொதுமக்கள் தாக்கப்பட்டமை மற்றும் மீனவர்களது படகுகள் மூழ்கடிக்கப்பட்டமை தொடர்பாக இடம்பெற்ற கூட்டத்தின் முடிவிலேயே, மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அண்மையில், கொழும்பிலுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு, அழைக்கப்பட்டிருந்த இராணுவத்தளபதி லயனல் பலகல்லவிடம், இவ்விடயம் தொடர்பாக வலியுறுத்தப்பட்டிருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

குறிப்பாக, அண்மையில் இடம்பெற்ற இராணுவ வாகன விபத்துக்களையடுத்து, பொதுமக்கள் தாக்கப்பட்டமை தொடர்பாக, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவி ராதிகா குமாரசுவாமி - இராணுவத் தளபதியுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

அந்தப் பேச்சுக்களின்போது, குடாநாட்டின் சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் படைத்தரப்பு ஈடுபடமாட்டாதெனும் உறுதிமொழி வழங்கப்பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பொதுமக்கள் தாக்கப்பட்டமை மற்றும் படகுகள் மூழ்கடிக்கப்பட்டமை தொடர்பாக, மீனவ சங்கப் பிரதிநிதிகளுக்கும், படை உயரதிகாரிகள் மற்றும் பொலிஸாருக்குமிடையேயான சந்திப்பொன்றுக்கு, மனித உரிமைகள் ஆணைக்குழு அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது.

முனை - புனித தொம்மையப்பர் தேவாலயத்தில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளும், தேவாலய பங்குத்தந்தை சி.இருதயதாஸும் கலந்துகொண்டனர்.

சுமார் இரண்டு மணி நேரத்துக்கு மேலாக நீடித்த இந்தச் சந்திப்பில், உரிய தீர்வுகள் எதுவும் எட்டப்பட்டிருக்கவில்லை.

அங்கு கலந்துகொண்ட, பருத்தித்துறைப் பகுதியில் நிலைகொண்டுள்ள 52 - 4 ஆவது படைப்பிரிவின் அதிகாரியான மேஜர் சம்பக - படையினர் எவரும் பொதுமக்களைத் தாக்கவோ அல்லது படகுகளைச் சேதப்படுத்தவோ இல்லையென வலியுறுத்தினார். எனினும், படையினரின் தாக்குதலினால் காயமடைந்தோர் தொடர்பான விபரங்களை மீனவசங்கப் பிரதிநிதிகள் சமர்ப்பித்ததுடன், தாக்குதலுக்குப் பயன்படுத்திய பொல்லுகள் சிலவற்றையும் காண்பித்தனர்.

அதேவேளை, அங்கு வருகை தந்திருந்த பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி - படைச் சிப்பாய ஒருவருக்கும், பொதுமகன் ஒருவருக்கும் இடையே இடம்பெற்ற சிறுமோதலை, படைத்தரப்பு பெருப்பித்து விட்டதாகக் குற்றம்சாட்டினார்.

எனினும், பேச்சுக்களின்போது பாதிக்கப்பட்ட பொதுமக்கள் மற்றும் மீன்பிடிப்படகுகளுக்கு - நஷ்டஈட்டினைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பாக, மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் பலனளிக்கவில்லை.

இதையடுத்து, தனக்குள்ள அதிகாரத்தின்கீழ், சம்பவம் இடம்பெற்ற பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவ படைப்பிரிவின் அதிகாரியை மேலதிக விசாரணைக்காக, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்திற்கு இணைப் பதிகாரி பி.றுவன் சந்திரசேகர அழைத்துள்ளதாகத் தெரியவருகிறது. (202)

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான மூன்றாவது பயிற்சிச் செயலமர்வு!

(யாழ்ப்பாணம்)

நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சினால், நாடளாவியரீதியில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அலுவலர்களுக்கான பயிற்சி வழங்கும் திட்டத்தின்கீழ், மூன்றாவது பயிற்சிச் செயலமர்வு - நாளைமறுதினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் கச்சேரியில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிச் செயலமர்வை, நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அஸ்வர் - அன்றைய தினம் காலை 9 மணிக்கு வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கவுள்ளார். யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் காரியாலய உத்தியோகத்தர்கள், இந்தப் பயிற்சிச் செயலமர்வில் பங்குபற்றவுள்ளனர்.

முதலாவது, இரண்டாவது பயிற்சிச் செயலமர்வுகள் முறையே - நுவரெலியாவிலும், ஒலுவிலிலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பதினோராயிரம் குடும்பங்களுக்கு இதுவரை மீளக்குடியமர்வு நிதி!

## யாழ்.செயலகம் வழங்கியுள்ளது

யாழ்.குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் - இதுவரை 11,000 குடுமபங்களுக்கு மீளக்குடியமர்வு நிதி வழங்கப்பட்டுள்ளதாக, யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வேலணையில் 709 குடும்பங்களுக்கும், ஊர்காவற்துறையில் 648 குடும்பங்களுக்கும், யாழ்ப்பாணத்தில 778 குடும்பங்களுக்கும், நல்லூரில் 117 குடும்பங்களுக்கும், சண்டிலிப்பாயில் 496 குடும்பங்களுக்கும், சங்கானையில் 796 குடும்பங்களுக்கும், உடுவிலில் 334 குடும்பங்களுக்கும், தெல்லிப்பளையில் 431 குடும்பங்களுக்கும், கோப்பாயில் 580 குடும்பங்களுக்கும், சாவகச்சேரியில் 3892 குடும்பங்களுக்கும், கரவெட்டியில் 379 குடும்பங்களுக்கும், பருத்தித்துறையில் 254 குடும்பங்களுக்கும், மருதங்கேணியில் 1416 குடும்பங்களுக்கும், காரைநகரில் 470 குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

இக்குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் மீள்குடியமர்வு நிதியாக, தலா 25,000 ரூபா வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை, வன்னிப் பகுதியிலிருந்தும், பிறபகுதிகளிலிருந்தும் வந்து மீளக்குடியமர்ந்த குடும்பங்ளில் பல- தமக்கு இதுவரை எதுவித உதவிகளும் கிடைக்கவில்லையென, முறைப்பாடு செய்துள்ளமையும் குறிபபிடத்தக்கது. (40)





தீபாவளியை முன்னிட்டு காங்கேசன்துறை மக்கள் வங்கி கிளையில் வைப்பிலிட்டவர்களுக்கு குத்துவிளக்கினை வழங்கும் திட்டத்தை நமது ஈழநாடு நிர்வாக இயக்குநர் சி.சிவமகாராஜா ஆரம்பித்து வைப்பதை முதற்படத்திலும், பிரதமவிருந்தினர்கள் அழைத்துவரப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

### விடியோ படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில், பெனற் ரத்நாயக்கவின் நெறியாள்கையில் உருவான "அஸ்வசும்" (ஈடு செய்தல்) என்னும் சிங்களத் திரைப் படம், ஆங்கில உபதலைப்புக்களுடன், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்குப் புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

### சட்டமுறைகள் தொடர்பான செயலமர்வு

(நவிண்டில்)

யாழ்.கச்சேரி கேட்போர்கூடத்தில், யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பிரதேச செயலர்கள், உதவி பிரதேச செயலர்கள், திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சனசமூக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோருக்கான சட்டமுறைகள் தொடர்பான செயலமர்வு - நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (116)

### அஞ்சல் முத்திரை வெளியீடு

(வண்ணை)

இந்து கலாசார அமைச்சினால் தேசிய கொண்டாட்டமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள தீபாளி தினத்தை யொட்டி, விசேட அஞ்சல் முத்திரையொன்று, அஞ்சல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.(111)

# வலி.தென்மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சமூகசேவைகள் நிறுவனம் வலி.தென்மேற்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட, சனசமூக நிலையங்களுக்கான கூட்டம் - நாளைமறுதினம் திங்கட்கிழமை - மானிப்பாய் பிரதேசசபை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர், உறுப்பினர்கள் ஆகியோர்களைக் கலந்துகொள்ளுமாறு உள்ளூராட்சி உதவியாளர் அறிவித்துள்ளார்.

இந்தப் பிரதேசத்திலுள்ள 76 உறுப்பினர்கள், இக்கூட்டத்தில் முக்கிய முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (91)


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்



முதலாவது அகவையில்



பெயர்: சி. சியானுகா

முகவரி: பளவத்தை, பொலிகண்டி.

இரண்டாவது அகவையில்



பெயர்: த. கேமிஷா

முகவரி: வங்கி ஒழுங்கை, ஆவரங்கால்.

நான்காவது அகவையில்



பெயர்: வி. யதூஷன்

முகவரி: சமரபாகு, வல்வெட்டித்துறை.

நான்காவது அகவையில்



பெயர்: ம. அன்ரனி டிருஷன்

முகவரி: உயரப்புலம், ஆனைக்கோட்டை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



--------------

பெற்றோர்

## சந்தேகம் → விளக்கம்



அறிவியல் என்றால் என்ன? எழுத்துக்கள், கணினி, புகையையும், நெருப்பையும் கக்கிக்கொண்டு மேலே எழும்பும் ரொக்கெட், வெள்ளைக் கோட்டுகள் அணிந்து கொண்டு ஆய்வகங்களில் பரபரப்பாகச் செயற்படும் விஞ்ஞானிகள், அறிவியல் கட்டுரைகள், கருவிகள், புரியாத சூத்திரங்கள்.... இவை மட்டும்தான் அறிவியல் என்று நினைத்து விட்டீர்களா? இவை மட்டும் அறிவியல் இல்லை.

'பருப்பு விரைவாக அவிவதற்கு ஒரு துளி எண்ணை விடு' என்று அம்மா சொல்வதும் அறிவியல்தான். எண்ணெய் மிக மெல்லிய படலமாகப் படர்ந்து, பாத்திரத்தில் வெப்பத்தைத் தங்க வைக்கிறது.

இதுபோல் சமையலறையில் ஒவ்வொரு செயலுக்கும் அறிவியல் அடிப்படை உண்டு. ஏன் விவசாயிகளின் செயல்கள்கூட விஞ்ஞானம்தான். எப்போது பயிர் செய்வது, எப்போது நீர் பாய்ச்சுவது, எப்போது அறுவடை செய்வது... இதுபோன்ற அனுபவ அறிவின் தொகுப்பும் அறிவியல்தான். இப்படி எல்லாத் துறையினரிடமும் அனுபவ அறிவாக அறிவியல் இருக்கிறது.

இன்று அறிவியல் என்பது - அனுபவ அறிவின் தொகுப்பு மட்டுமல்ல, அனுபவ அறிவைத் தாண்டி, காரண காரியங்களைத்தேடி இயற்கையை விளக்க முற்படும் அறிவுச் செயலாகவும் விளங்கு கிறது.

## கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்

சிவசாமி - தன்னுடைய கிராமத்தில் ஒரு பலசரக்குக்கடை வைத்திருக்கிறார். ஒருநாள், பக்கத்து நகரத்துச் சந்தையில் கோழியும், அரிசியும், வீட்டைக் காவல்காக்க ஒரு நாயும் வாங்கிக்கொண்டு - தனது கிராமத்திற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார். அவர் வரும் வழியில், ஒரு ஆற்றைக்கடக்க வேண்டி ஏற்பட்டது. ஆறு அபாயகரமானதாக இருந்ததால், தோணியில் ஒருமுறைக்கு ஒரு பொருளை மட்டும்தான் கொண்டு செல்லமுடியும்.

அவர் தன்னுடன் அரிசியை முதலில் எடுத்துச் சென்றால், நாய் கோழியைப் பிடித்துவிடும். நாயை எடுத்துச் சென்றால், கோழி அரிசியைக் கொத்தித் தின்றுவிடும்.

அவர் மூன்றையும் தனது கிராமத்திற்குக் கொண்டுசெல்ல உதவுபுரியுங்கள். விடை அடுத்தவாரம்

## விடுகதை

1) தோசை கருகுவதேன்
வெற்றிலை அழுகுவதேன்?
2) பட்டம் பறப்பது இதனால்
படிக்க உதவுவதும் அதுவே?
3) பசுவின் பால் கறப்பது எப்படி
இவர் பிறந்தது எப்படி?
4) பாம்போருவதேன்
பழங்கிணறு இடிவதேன்?
5) நாய் குரைப்பதேன்
நா இனிப்பதேன்?

### விடைகள்

1) புரட்டாததால்
2) நூலால்
3) குந்தியிலிருந்து
4) அடிப்பாரற்று
5) கல்கண்டால்

மகேந்திரலிங்கம் நிரோஷனா
தரம் -9, யாழ் இந்து மகளிர் கல்லூரி

## எனது சுயசரிதை

எனது பெயர் சி.லதன்.
என் அப்பாவின் பெயர் சு.சிவஞானம்.
என் அம்மாவின் பெயர் சி.பத்மாவதி.
என் சகோதரனின் பெயர் வினோதரன்.
எனக்கு விருப்பமான பாடம் தமிழ்.
என் நண்பனின் பெயர் ஜெனத்குமாரன்.
எனது பாடசாலையின் பெயர் யா-கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்.

சி.லதன்

## மூன்று நேர்கோடுகளை வரைவதன்மூலம் மீன்களைத் தனித்தனியாகப் பிரியுங்கள்



விடை அடுத்தவாரம்

# விளையாட்டு

மிகவும் பிரபல்யமான விளையாட்டு இது. ஐந்து, ஆறு பேர் விளையாடக்கூடியது. முதல் நபர் 'என்னிடம் ஒரு பேனா உள்ளது' என்பார். இரண்டாவது நபர், 'என்னிடம் ஒரு பேனாவும், ஒரு புத்தகமும் உள்ளது' என்பார். மூன்றாவது நபர், 'என்னிடம் ஒரு பேனாவும், ஒரு புத்தகமும் ஒரு சப்பாத்தும் உள்ளது' என்பார். இப்படியே வரிசையாக முதலில் சொன்ன பொருளில் இருந்து ஒவ்வொன்றாகச் சேர்த்துக் கொண்டே போக வேண்டும். வரிசையை மாற்றுபவர் அல்லது பொருளின் பெயரை மாற்றுபவர் - விளையாட்டிலிருந்து இடை நிறுத்தப்படுவார். நடுவர் ஒருவர் ஒவ்வொரு பொருளையும் குறித்துக்கொண்டே வரவேண்டும். அப்போது தான் சரிபிழை பார்க்கமுடியும்.

இங்கே மடிக்கவும்



## தந்திரத்தால் பூனையைக் கொன்ற எலிகள்

கே.வி.குணசேகரம்

பரமேஸ்வரன் ஒரு விவசாயி, அவர், நெல், பயறு, உழுந்து, எள்ளு போன்ற தானியங்களைப் பயிரிடுவார். விளைந்த தானியங்களை அறுவடை செய்து வந்து, வீட்டில் சாக்குகளில் சேமித்து வைப்பார்.



இலட்சுமியம்மாள் பரமேஸ்வரனின் அன்பு மனைவி. அவர்களுக்கு அபிராமி, கஜேந்திரன் என்று இருபிள்ளைகள் இருந்தனர். இருவரும் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்று வந்தனர். இருவரும் படிப்பில் கெட்டிக்காரர்கள்.

அபிராமி தனது நண்பிகளுடன் ஒற்றுமையாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பாள் அதே போல கஜேந்திரன் தனது நண்பர்களுடன் ஒற்றுமையாகவும், மகிழ்வாகவும் விளையாடுவான். இருவரும் உயிர்கள் மீது அன்பு பாராட்டினர்.

பரமேஸ்வரன் சேமித்து வைத்திருக்கும் தானியங்களை எலிகள் தின்று நாசமாக்கிக் கொண்டிருந்தன. கஜேந்திரன் அன்பாக ஒரு நாயை வளர்த்து வந்தான். அதற்கு மணி என்று பெயர் வைத்திருந்தான். "எலித் தொல்லை தீரவேண்டுமானால் பூனை ஒன்றை வளர்க்க வேண்டும்" என்று அடிக்கடி பரமேஸ்வரன் சொல்வார்.

ஒரு நாள் அபிராமியும், கஜேந்திரனும் பாடசாலையால் வரும்போது, பூனைக்குட்டி ஒன்றை வழியில் கண்டனர். அந்தப் பூனைக்குட்டி - மிகவும் சிறியது. பிறந்து சில நாட்களே ஆனது. அதைக் காகம் கொத்தியது. "பாவம் சின்னஞ்சிறிய பூனைக்குட்டியை யாரோ கொண்டுவந்து, வீதியில் விட்டிருக்கிறார்கள். பாவம் காகம் கொத்து கிறது" என்றாள் அபிராமி.

கஜேந்திரன் காகத்தைக் கலைத்துவிட்டு, பூனைக் குட்டியைத் தூக்கினான். "அப்பா பூனைக்குட்டி வளர்த்தால் எலித்தொல்லை தீரும் என்றவர். இதை வீட்டுக்குக் கொண்டு போவோம்" என்றான் கஜேந்திரன்.

பூனைக்குட்டியைக் கண்டதும் - மணி கோபத்துடன் உறுமியது.

"மணி - பூனைக்குட்டி பாவமடா.... உன்னைப்போல் தான் அனாதையாக வீதியில் நின்றது. தூக்கி வந்து விட்டேன். இனிமேல் அதோடு விளையாடு" என்றான் கஜேந்திரன்.

இரண்டு நாட்களின் பின்பு - மணியும், பூனைக்குட்டியும் சேர்ந்து விளையாட ஆரம்பித்தன. கஜேந்திரன் பூனைக்குட்டிக்கு உமா என்று பெயர் வைத்தான்.

உமா வளர்ந்து பெரியவளானது. கூரையில் எலிகள் கீச்சிடும் சத்தம் கேட்டால், உடனே கூரையில் ஏறி, எலியைப் பிடிக்கத் துரத்தும். சுதந்திரமாக பகலில் கூரையில் ஓடி விளையாடும் எலிகள் - இரவில் கீழே இறங்கி தானியங்களை வயிறார உண்டுவந்தன.

உமா வளர்ந்த பின் எலிகளால் கீழே இறங்க முடியவில்லை. அத்துடன், கூரையில் இருக்கவும் முடியவில்லை பகலில் சத்தமில்லாமல், கூரைமீது ஏறும் உமா - எலிகளை ஒவ்வொன்றாகப் பிடித்து உண்ணத் தொடங்கியது.

(தொடரும்....)



# சிறுவர் அரங்கம்

## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்



மொழி - இத்தாலியன்
தலைநகரம் - ரோம்
சமயம் - கிறிஸ்தவம்
நாணயம் - லிரா
சராசரி ஆயுள் -
ஆண்கள் - 75
பெண்கள் - 82
முக்கிய நகரங்கள் -
ரோம், ட்ரீஸ்டி, வெனிஸ், மிலான்

இத்தாலி ஒரு தென் ஐரோப்பிய நாடு ஆகும். புகழ்மிக்க ரோம சாம்ராஜ்யத்தின் விளைநிலம் இந்த நாடாகும். உலகின் சிறந்த சித்திரக்காரர்களையும், சிற்பிகளையும் உருவாக்கிய நாடுகளில் இத்தாலியும் ஒன்றாகும். இத்தாலியில் உள்ள ஒலிம்பிக்கோ தியேட்டர்தான் - மிகப் பழைய திரை அரங்கமாகும். வைன் என்னும் பானத்திற்கு உலகப் புகழ்பெற்றது. ஐரோப்பிய நாடுகளிடையே, குறைவான மக்கள் தொகையைக் கொண்டது இத்தாலியாகும். சர்வாதிகாரி முசோலினி 1920-1943 வரை இந்த நாட்டை ஆட்சிபுரிந்தார். 1946 இல் மக்கள், அரசாட்சிக்கு எதிராக வாக்களித்தனர். இதனைத் தொடர்ந்து இத்தாலி குடியரசானது.

இந்த நாட்டின் முக்கிய உற்பத்திகளாக, விவசாயம்-திராட்சை, கோதுமை, ஒலிவ். உற்பத்தி- துணிகள், செருப்புகள், இயந்திரங்கள், வாகனங்கள். கனிமம்-இயற்கைவாயு, கிரனைட் ஆகியனவாகும்.



# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :-
செ.பிரதீபன்
கற்கும் பாடசாலை :-
புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
தொலைக்காட்சி பார்த்தல்.



முழுப்பெயர் :-
அ.துஷானி
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், விளையாட்டு.

முழுப்பெயர் :- அ.அகிம்சன்
கற்கும் பாடசாலை :-
தருமபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை
கற்கும் தரம் :- 2
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.

முழுப்பெயர் :- ச.சந்திரதாஸ்
கற்கும் பாடசாலை :-
வல்வை மகளிர் மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
கிரிக்கெட், தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர்:- மு.அம்சனா
கற்கும் பாடசாலை :-
கொக்குவில் இந்துக் கல்லூரி
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், நடனம்.

முழுப்பெயர்:- வே.ஸ்ரீசாரதா
கற்கும் பாடசாலை :-
சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :-
முத்திரை சேகரித்தல்.

முழுப்பெயர்:- ர.சிவகாமி
கற்கும் பாடசாலை :-
கொக்குவில் இந்துக் கல்லூரி
கற்கும் தரம் : 9
ஆர்வமுள்ள துறைகள் :-
கல்வித்துறை, கலைத்துறை, முத்திரை சேகரித்தல்.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................

திகதி .................. ஒப்பம் ..................

அதிபர்/ஆசிரியர் ஒப்பம் .................. பெற்றோர் ஒப்பம் ..................

## தெரிந்து கொள்ளுங்கள்

- மயிலுக்குப் பிடித்தமான இரை பாம்பு.
- வெட்டுக்கிளி நாட்கணக்கில் பறக்கக்கூடியது.
- கடலில் கலக்காத நதி யமுனை.
- பத்திரிகை அதிகம் படிப்பவர்கள் பல்கேரிய மக்கள்.
- யானையும், குதிரையும் நின்றவாறே தூங்கும்.

கு.மணிமாறன்
தரம் - 10
யாழ். ஹாட்லிக் கல்லூரி.

இங்கே மடிக்கவும்



## ஏமாந்தீயா? (சென்ற வாரத் தொடர்ச்சி......)




## உங்கள் கைவண்ணம்



சே.மதுசன்
தரம் - 4



ஜெ.ஜெயசீதா
தரம் - 9
வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

## விஞ்ஞான அறிவு

1) மனிதனில் காணப்படும் என்புகளின் எண்ணிக்கை எத்தனை?
206 என்புகள்.
2) மனிதனில் காணப்படும் பெரிய என்பு எது?
தொடை என்பு.
3) கண்மாற்று சிகிச்சையின்போது கண்ணிலிருந்து மாற்றப்படும் பகுதி எது?
விழிவெண்படலம்.
4) ஒரு கலமுள்ள விலங்கு எது,?
அமீபா.
5) நுளுக்குக்காட்டியைக் கண்டு பிடித்தவர் யார்?
ஜென்சன்.

ஜெ.புருசோத்தமன்
தரம் - 7
நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

பலசொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்.

*திருக்குறள்*

## நமது நோக்கு

### சாண் ஏற முழம் சறுக்கும் சமாதானம்!

சான் ஏற முழம் சறுக்கிறது எனத் தமிழில் ஒரு பழமொழி உண்டு.

சிறிலங்காவின் இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் குறித்த மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்வோமானால், அதன் மூலம் கிடைக்கக்கூடிய பெறுபேறுகளின் தன்மைக்கு மேற்குறித்த பழமொழி மிகப் பொருத்தமானதாக அர்த்தம் கொடுக்கும்.

கடந்த காலங்களில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் தன்மைகளை மீள்பார்வை செய்யும் போதும்கூட இதனை நாம் உணர்ந்துகொள்ள முடியும்.

ஆளும் கட்சி சமாதானத்திற்குத் தயார் என்று முன்வந்தால், எதிர்க்கட்சிகள் அதற்கான எதிர்வியூகத்தை அமைக்கத் தயாராகிவிடும்.

எதிர்க்கட்சிகளின் அழுத்தம் மற்றும் அரசியல் ரீதியான அச்சுறுத்தல் காரணமாக, தனது எதிர்கால அரசியல் நலனைக் கருத்தில் கொண்டு, தேசிய நலனுக்கு அவசியமான சமாதான முயற்சிகளை இழுத்தடிக்கவோ அல்லது நிரந்தரமாகக் கிடப்பில் போடவோ முடிவெடுப்பதைத் தவிர, அரசாங்கத் தரப்புக்கு வேறுவழியே தென்படாது.

சாண் அளவு தூரம் சந்தேகத்திற்குரிய நம்பிக்கையுடன் முன்னேற முயன்ற சமாதான நகர்வு, முழமளவுக்குப் பின்னடைவு கண்டுவிடும்.

மாறி, எதிர்க்கட்சி ஆட்சிபீடம் ஏறிச் சமாதானம் பற்றிய சங்கை ஊதத் தொடங்கினால்போதும், முன்னாள் ஆளுங்கட்சி எதிர்வரிசையில் அமர்ந்து கொண்டு அமைதி எதிர்ப்பு நடவடிக்கையில் ஊளையிட ஆரம்பித்துவிடும்.

சிறிலங்காவின் இனவாத அரசியல் வரலாறு தெளிவாக உணர்த்தியுள்ள பாடம் இதுவாகும்.

அதுமட்டுமல்ல, இனவிவகாரம் இந்தளவுக்கு இடியப்பச் சிக்கல் அடைந்தமைக்கு இதுவே இந்த அரசியல் சுயநல அணுகுமுறையின் அதிவேகத்தன்மையே காரணமுமாகும்.

சிறிலங்காவின் அரசியல், இனப்பிரச்சினையை மையப் படுத்தியே வரையப்பட்டுள்ளது எனலாம். அதாவது, பேரினவாதிகளின் அரசியல் அதிகாரத்திற்கான சதுரங்கப் போட்டியில், பகடைக்காய்களாகச் சிறுபான்மை மக்களின் வாழ்வுரிமை சம்பந்தப்பட்ட விடயங்களே பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டும் வருகிறது.

கொள்கைகள் ஒருபோதும் சந்தர்ப்பவாத அரசியல் வாதிகளான வலதுசாரிகளுக்கும் சரி, வரண்ட வெறும் சித்தாந்த வாதிகளான நடைமுறைச் செயற்பாட்டுத்திறனற்ற, சாத்தியமற்ற புரட்சிக் கோஷங்களை முன் வைத்தே, அரசியலில் தமது இருப்பை நிலைநிறுத்தப் போராடிவரும் பெரும்பாலான இடது சாரிகளும் சரி, தேசியவாதம் என்ற பெயரில் பேரினவாத சக்திகளின் அச்சுறுத்தலுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அடிமையானவர்களாக இருப்பதுதான் சிறிலங்காவின் அமைதியற்ற எதிர்காலத்திற்கு காரணமாகும்.

இதனைத் தென்பகுதி மக்களும், அவர்களுக்குள்ளேயுள்ள புத்திஜீவிகளும் தெளிவாகப்புரிந்துகொள்ளாதவரை உறுதியான, நிரந்தரமான சமாதானம் என்பது - தூரத்துப் பச்சையாகவே இருக்கும்.

இன்றைய சமாதான நகர்வு தொடர்பான முன்னெடுப்புக்களின் யதார்த்த நிலையும், யார் எதனைச் சொல்லி எப்படியான விளக்கங்களைக் கூறி நியாயப்படுத்தி, நம்பிக்கையூட்ட முயன்றாலும்கூட, தென்னிலங்கைப் பேரினவாதத் தலைமைகளின் அணுகுமுறைகளின் அடிப்படையில் பார்க்கும்போது, மேற்குறித்த கூற்றுக்கு அமைவாக இருப்பதை உணரமுடியும்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நேரடிப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சியில், நோர்வேயின் விசேட தூதுவர் ஈடுபடுவாரென செய்தி வெளிவந்த அதேநாளில், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவரான 'ட்ரைகேவ் ரெலவ்சனை' பதவி நீக்குமாறு நோர்வே பிரதமருக்கு, சந்திரிகா அவசர கடிதமொன்றை அனுப்பியுள்ளார் என்ற செய்தியும் வெளியாகியுள்ளது.

ஆதாரமற்றதும், எந்தவகையிலும் உறுதிப்படுத்த முடியாததுமான காரணங்களை குற்றச்சாட்டுக்களாக முன்வைத்து, கண்காணிப்புக்குழுத் தலைவரை நீக்குமாறு சந்திரிகா கோருவது, சுத்தமான சமாதான விரோத அரசியற்தனமே ஆகும்.

முன்னர் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் விடயத்திலும் இதே மாதிரியிலான நடவடிக்கையே சந்திரிகா மேற்கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சந்திரிகாவின் கோரிக்கையை நோர்வே அரசு ஏற்குமேயானால், ரெலவ்சன் குற்றவாளியாக்கப்பட்டு விடுவார். கண்காணிப்புக்குழுவின் செயற்பாடும் சந்தேகத்திற்குரியதாக அனைவராலும் கருதப்படும் சூழல் உருவாகிவிடும்.

உண்மையற்ற விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல் விவகாரம் தொடர்பான கடற்படையின் அறிக்கையும், உண்மையானதாக நியாயப்படுத்தப்பட்டுவிடும்.

இது எதிர்கால சமாதான முயற்சிகளுக்கு பெரும் பின்னடைவையும் ஏற்படுத்திவிடும்.

சந்திரிகா, சமாதான முயற்சிகள் சாண் ஏற முழம் தள்ளிவிடும் பேரினவாத மூலோபாயத்தையே தொடர்ந்தும் கையாண்டு வருகிறார். இதனை நோர்வே மட்டுமல்ல சர்வதேசம் முழுவதுமே புரிந்கொள்ளவேண்டியது காலத்தின் தேவையாகும்.

'சமாதானத்திற்கான யுத்தம' என்ற தத்துவத்தின் உண்மையாளரால் வேறு என்னதான் செய்ய முடியும்?

## நாடும் நடப்பும்




நன்றி : தமிழ் இணையம்.

# சிங்கள மக்களின் உரிமைகளைக் காக்க இரு பெரும் கட்சிகளும் தவறிவிட்டன

### *சிஹல உறுமய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க*

வடக்கு-கிழக்கு மக்களின் எழுச்சியினை வெளிப்படுத்துவதற்கு எவ்வாறு பொங்குதமிழ் கொண்டாடப்படுகிறதோ? அதேபோல், சிங்கள மக்களின் எழுச்சியினை வெளிப் படுத்துவதற்கு 'சிஹல உதானய' கொண்டாடப்படவிருக்கின்றது என்று சிஹல உறுமயவின் தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

சிஹல உறுமய கட்சி தலைமையின் கீழ் நடைபெறும் சிஹல உதானயவின் முதலாவது நிகழ்ச்சி - நவம்பர் மாத நடுப்பகுதியில் வவுனியாவிலுள்ள கெக்குணாவல தொடக்கம் கோகிலாய் வரையிலான அனைத்து சிங்கள கிராமங்களிலும் நடத்தப்படும்.

இதன்பின்னர் - திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலுள்ள சிங்கள கிராமங்களில் தொடர்ச்சியாக மூன்று மாதங்களாக நடத்தப்படும்.

நாரஹேன்பிட்டியவிலுள்ள சிஹல உறுமயவின் கட்சி காரியாலயத்தில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இத்தகவல்களைத் தெரிவித்தார். தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில்,

சிங்கள மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதை இரண்டு சிங்கள கட்சிகளும் மறந்துவிட்டன. இந்நிலையில், வடக்கு-கிழக்கு பிரதேசத்திலுள்ள சிங்கள மக்களின் உரிமைகளை யார் கட்டிக்காக்கப் போகின்றார்கள் என்ற பெருங்கேள்வி எழுகின்றது.

இவற்றை நிறைவேற்றுவதற்காகவே சிஹல உறுமய- 'சிஹல உதானய' எனும் நிகழ்ச்சியை நடத்தவுள்ளது. அத்துடன், யுத்தகாலத்தில் வடக்கு-கிழக்குப் பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்பட்ட ஒன்றரை லட்சம் சிங்கள மக்களினதும், தற்பொழுது வாழ்கின்ற மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட சிங்கள மக்களினதும் உரிமைகளைக் கட்டிக்காக்க - ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தவறி விட்டன.

குரங்குபாஞ்சான் முகாமிற்குப் போய் திரும்பியது எங்களுடைய ஆரம்பநிகழ்வேயாகும். அந்தப் பயணம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும். யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட மூன்று அமைச்சர்களை - மக்கள் விரட்டியபோது, அவர்களிடம் மன்றாடி யாழ்ப்பாணத்திற்குள் சென்ற அமைச்சர்களைப்போல, நாங்கள் குரங்குபாஞ்சான் முகாமிற்குச் செல்லவேண்டிய அவசியம் இல்லை, இலங்கை இராணுவத்தின் அறிவுரைகளைக் கேட்டபின்பே நாங்கள் திரும்பினோம்.

இடைக்கால நிர்வாகம் ஒன்றை அமைப்பதற்காகத் திருகோணமலை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலுள்ள சிங்கள பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள் மற்றும் முக்கிய சிங்கள உறுப்பினர்களுக்கு - நோர்வே அரசாங்கம் வீடு, வாகனம் கொடுத்திருக்கிறார்கள். சிஹல உறுமய என்றொரு கட்சி இருக்கின்ற வரையிலும், இடைக்கால நிர்வாகம் ஒன்றினை அமைக்கவிடமாட்டோம் என்றார்.

## இலங்கை இராணுவ அதிகாரிகள் குழுவொன்று பாகிஸ்தானுக்கு விஜயம்

(இஸ்லாமாபாத்)

இலங்கை இராணுவத்தின் அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியின் கட்டளை அதிகாரியான மேஜர் ஜெனரல் சிசிரை விஜேசூரிய தலைமையிலான இராணுவ அதிகாரிகளின் குழுவொன்று பாகிஸ்தானுக்கு விஜயம் செய்துள்ளது.

மேஜர் ஜெனரல் சிசிரை விஜேசூரிய தலைமையிலான இக் குழுவினர், கடந்த செவ்வாய்க்கிழமை பாகிஸ்தானில் விமானப் படைத்தலைமையகமான சக்லாலாவுக்கு விஜயம் செய்தனர்.

இந்த விஜயத்தின்போது, பாகிஸ்தான் விமானப்படையின் பயிற்சிப் பிரிவிற்கான பிரதித் தலைமை அதிகாரி யெய்மாரில் மதுட் அக்தாரைச் சந்தித்து பேச்சுநடத்தினார்.

இந்தச் சந்திப்பின்போது இருதரப்பு தொழிலாளர் ஒத்துழைப்புக்கள் குறித்து அதிகளவு ஆராயப்பட்டதுடன், பயிற்சிகள் குறித்தும் ஆராயப்பட்டது.

## நெருப்பாற்று நீச்சலின் பத்தாண்டுகள் நூல் திருகோணமலையில் அறிமுகம்

சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் 'நெருப்பாற்று நீச்சலிற் பத்து ஆண்டுகள்' என்ற வரலாற்று நூலின் அறிமுக விழா - திருகோணமலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் காலை திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் - சாள்ஸ் அன்ரனிப் படைப்பிரிவின் அரசியற்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - தேசியக் கொடியினைத் திருகோணமலை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் தர்மன் ஏற்றி வைக்க, சாள்ஸ் அன்ரனிப் படைப்பிரிவின் கொடியினை - சாள்ஸ் அன்ரனி சிறப்புத் தளபதி லெப். கேணல் கோபித் ஏற்றி வைத்தார். சாள்ஸ் அன்ரனியின் திருவுருவப்படத்திற்கான ஈகைச்சுடரினை - அவருடைய சகோதரர் இக்னேசியாஸ் லூக் காஸ் ஏற்றிவைக்க, லெப். சீலனின் திருவுருவப் படத்திற்கான மலர்மாலையை - மேஜர் றோலின் தாயார் அணிவித்து மல ரஞ்சலி செலுத்தினார்.

நெருப்பாற்று நீச்சலிற் பத்து ஆண்டுகள் என்ற வரலாற்று நூலின் வெளியீட்டுரையினை - சாள்ஸ் அன்ரனிப் படைப்பிரிவின் மூத்த தளபதிகளில் ஒருவரான அமிர்தாப் நிகழ்த்தினார். வெளியீட்டின் முதற்பிரதியை - சாள்ஸ் அன்ரனிப் படைப்பிரிவின் சிறப்புத் தளபதி லெப். கேணல் கோபித் வழங்க, சாள்ஸ் அன்ரனியின் மூத்த சகோதரர் சேவியர் லூக்காஸ் பெற்றுக் கொண்டார்.

# பொ.ஐ.முவிருந்து விலகிய புத்திரசிகாமணி கூட்டமைப்புடன் இணைவதாக அறிவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் புத்திரசிகாமணி - பொதுஜன ஜக்கிய முன்னனியிலிருந்து வெளியேறுவதாகத் தெரிவித்தார். நேற்றுமுன்தினம் மாலை நாடாளுமன்றத்தில் உரையாற்றிய புத்திர சிகாமணி, தமிழ்த் தேசிய கூட்டமைப்போடு நாடாளுமன்றக் கூட்டங்களில், தான் பங்கேற்கப் போவதாகத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க - தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவதற்கான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை

தீபாவளிப் பண்டிகையன்று - தமது ஆர்ப்பாட்டத்தை நடதுவதென இலங்கை சுதந்திரக் கட்சி எடுத்த தீர்மானம், தமிழ் மக்களை அவமதிக்கும் செயலாகும்.

இத்தகைய பிரச்சினையைத் தேசியக்கட்சி ஒன்று எடுக்கும் வேளையில், 1983 ஆம் ஆண்டு இடம்பெற்றதுபோல, கலவரம் ஒன்று இடம் பெறுவதற்கான சாத்தியப்பாடுண்டு என்று பொது மக்கள் அச்சம் கொண்டிருக்கிறார்கள்.

பொதுஜன ஜக்கிய முன்னணியிலிருந்து விலகிவிடும் நான- ஐ க்கிய தேசிய முன்னணியில் இணைந்து கொள்ளப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் - புத்திரசிகாமணி, பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து விலகிக்கொள்வதாகத் தெரிவித்தபோது, சபையில் ஆரவாரம் செய்தனர்.

# அரசியல் உள்நோக்கங்களைக் கொண்ட ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயம்

கே.ரி.கணேசலிங்கம்

இந்தியா - பாகிஸ்தானுடன் திடீரென சமாதான உரையாடலை ஆரம்பிக்கப்போவதாக அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு பாகிஸ்தானுக்கு மட்டுமல்ல, உலகநாடுகளுக்கே அதிர்ச்சியானதாகவே அமையும். ஆனால், இந்தியாவின் இந்த அறிவிப்புக்குப் பின்னால், பல அரசியல், இராணுவ நகர்வுகளைச் செய்யப்போவதென்பதுடன், இராஜதந்திரரீதியான நடவடிக்கைகளையும் பாகிஸ்தான் மீது பிரயோகிக்கப்போகின்றது என்பது மட்டும் தற்போதைக்கு வெளிப்படுத்தக்கூடியதாகவுள்ளது. இந்தவாரம் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தின் பின்னாலுள்ள அரசியலையும், அதன் சாதக, பாதகத் தன்மைகளையும் பரிசீலிப்போம்.



ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியின் வெளிநாட்டுக் கொள்கை - இரண்டு பிரதான மையங்களைக் கொண்டது. ஒன்று - மேற்கு நாடுகள் தொடர்பானது. இரண்டாவது - அயல்நாடான இந்தியா சம்பந்தப்பட்டது. ரணிலின் வெளிநாட்டுக் கொள்கை - மேற்கு சார்பானது என்பதில் எந்த வித சந்தேகமும் கொள்ளவேண்டியதில்லை. அது ஒருவகையில் ரணிலின் தாய்மாமனான ஜேஆர் ஜெயவர்த்தனா, தனது ஆட்சிக்காலத்தில வகுத்துக்கொண்ட கொள்கைக்கு ஒப்பானது. அதன்படி மேற்கு சார்புநிலையில், இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக்கொண்டு, மேற்கொள்ளப்பட்ட உள்நாட்டின் அரசியலில் ஐ.தே.மு. ஆட்சியை ஸ்திரப்படுததுவதுடன், எதிர்கால தேர்தல்களுக்கு (நாடாளுமன்றம், ஜனாதிபதி) வெற்றிகரமாக முகங்கொடுக்கத் தயாராகின்ற பணியையும், ரணில் ஏற்படுத்த விரும்பினார். அதன்படி, சமாதான காலம் முழுவதும் இலங்கையின் பொருளாதாரத்தை, வளர்ச்சிநிலையை நோக்கி நகர்த்திக் கொண்டு செல்கின்றார். வட - கிழக்கு இலங்கையைவிட, தென்னிலங்கையின் நேரடிமுதலீடு, உல்லாசப் பயணிகளது வருகை, வர்த்தக ரீதியான ஏற்றுமதி போன்றவற்றில், 2000 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, ஏறக்குறைய 60 சதவீதமான வளர்ச்சியை எட்டியுள்ளது. 2003 முதல் ஆறு மாதங்களில், இலங்கையில் குவிந்த நேரடிமுதலீடு - 170 மில்லியன் அமெரிக்க டொலர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இம்முதலீட்டால், இலங்கைக்கு அசலாகக் கிடைத்த வருமானம் 55 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். இதேபோன்றே, ஏனையதுறைகளிலும் தென்னிலங்கையின் பொருளாதாரம் அபிவிருத்தியை நோக்கி நகர்கிறது. இதற்கு மிகப்பிரதான பலமாக அமைந்திருப்பது - மேற்கு நாடுகளுடனான இலங்கை அரசின் நெருக்கமான உறவாகும். மேற்கு நாடுகளின் உறவினால், இலங்கையில் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

இரண்டாவது - மிகப்பிரதான சக்தியாகவும், சவாலாகவும் அமைந்திருப்பது இந்தியாவாகும். இதனை எதிர்கொள்வதே ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பிரதான பிரச்சினையாக அமைந்தது. அப்பிரச்சினையை ஜே.ஆர்.மாதிரிக் கையாள விரும்பவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. அதாவது, இந்தியாவை - ஜே.ஆர். அவமதிக்கும் பாணியிலான அரசியலை (**Ignoring Politics**) பின்பற்றி, பிற்காலத்தில் பல நெருக்கடிகளையும் எதிர்கொள்ளவேண்டி ஏற்பட்டது. ஆனால், ரணில் விக்கிரமசிங்கவோ அவ்வாறில்லாது, ஒரு வெளிநாட்டுறவை இந்தியாவுடனும், மேற்கு நாடுகளுடனும் பேண முயலுகின்றார். இத்தகைய உறவுக்கு வாஜ்பாயைவிட, அத்வானி பொருத்தமான தலைவர் என்ற கருத்தும், ரணிலிடமுண்டு. அவ்வாறு, இந்தியாவைப் பகைத்துக் கொள்ளாத உறவை ஏற்படுத்திக்கொள்ள ரணில் விரும்புவதற்கு, ஆழமான அரசியல் காரணமும் உண்டு.

விடுதலைப் புலிகளின் இராணுவ வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கக்கூடிய பலம் - இலங்கைப் படைகளுக்கு இல்லை என்பதை, வெளிநாட்டு நிபுணர்கள் கூறமுன்பே ரணில் புரிந்துகொண்டுவிட்டார். அதனால், போர்நிறுத்த உடன்பாடு முறிந்தால், அதனால் ஏற்படக் கூடிய நிலைமையை எதிர்கொள்வதற்கோ அல்லது சமாதான முயற்சியின்போது, புலிகளின் கோரிக்கை மேலோங்காமல் தடுப்பதற்கோ இந்தியாவின் உதவியும், ஒத்துழைப்பும் இலங்கைக்கு தேவையானது. இதே வேளை, இலங்கைக்கு அயலிலுள்ள ஒரேயொரு நாடு இந்தியா என்பதுடன், பலமான இலங்கை ஆட்சியாளர் சார்பான மனிதாபிமான மனநிலையைக்கொண்ட அரசும் இந்தியா என்பதை, ரணில் நன்கு விளங்கி வைத்துள்ளார்.

மேலும், விடுதலைப் புலிகளின் கடற்படைப் பலத்தைக் கட்டுப்படுத்வோ, எதிர்கொள்ளவோ திராணியற்ற இலங்கைக் கடற்படைக்கு - இந்தியாவின் உதவியும், ஒத்துழைப்பும் அவசியமானது.

ஒரு வகையில் கூறுவதாயின், இலங்கையின் பாதுகாப்புக்குரிய வெளிநாட்டுக் கொள்கையில்- இந்தியா முதலிடத்தில் அமைந்துள்ளது. இந்தியாவை - இலங்கையின் பாதுகாப்புக்கும், மேற்கு நாடுகளை - இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கும் என வகைப்படுத்தி, ரணில் அரசாங்கம் ஒரு வெளிநாட்டுக் கொள்கையை வகுத்துள்ளது. இதனையே, ரணில் தனது அண்மைய இந்திய விஜயத்திலும் செய்ய முயன்றார். ஏற்கனவே நிறைய பாதுகாப்பு உதவிகளைப் பெற்றுள்ள இலங்கை அரசு, வெளிப்படையாகப் பாதுகாப்பு உடன்பாட்டை மேற்கொள்ளப்போவதாகக் கூறியிருப்பதும், ரணிலின் இலக்கு எட்டப்பட்டதற்கான அறிகுறியாகவுள்ளது. இந்தியாவுடன் - இலங்கை செய்யவுள்ள பாதுகாப்பு உடன்படிக்கை - புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறுகின்ற செயலாக அமையாதா? என்ற சர்ச்சையும் கவனிக்கப்படவேண்டிய அம்சமாகும். ஆனால், பாதுகாப்புச் சார்ந்த கொள்கை என்பதை உடைக்கும் வகையிலான, பல பொருளாதார உடன்பாடுகளுக்கான உத்தேச எண்ணப்பாடு முன்மொழியப்பட்டுள்ளது என்ற யதார்த்தமான கேள்வி, ஒரு வாசகனுக்கு எழலாம்.

1998 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய அரசுகளுக்கிடையில் தடையற்ற வர்த்தக உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. (குறிப்பிட்ட எண்ணிக்கையான பொருட்களுக்கு) அதன் கீழ், இலங்கையின் சந்தைகளில் இந்திய உற்பத்திப்பொருட்கள் குவிக்கப்படுகின்றன. இலங்கையின் சிறுகைத்தொழில் உற்பத்திகள் அனைத்தும் கிடப்பில் போடப்படும் நிலை ஏற்பட்டுவிட்டது. உள்ளூர் உற்பத்தியாளர்களுக்குப் பதிலாக, இறக்குமதி முகவர்கள் என்றநிலை வளர்ந்து வருகின்றது. இந்தியாவிலிருந்தும், பிறநாடுகளிலிருந்தும் பொருட்களை இறக்குமதி செய்து, விநியோகிக்கும் முகவர்களாகவே உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மாறி வருகின்றனர. இந்த உடன்படிக்கையால், இந்தியா அடைந்த வர்த்தக மீதி மட்டும் - 667.8 மில்லியன் அமெரிக்க டொலர் என்பதும் இலங்கை அடைந்த இழப்பீடு மட்டும் 1006 மில்லியன் அமெரிக்க டொலர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதனால், ரணில் விக்கிரமசிங்க அரசு-இந்தியாவை, இலங்கையின் பொருளாதார விடயத்தில் இணைத்துக் கொள்வது ஆபத்தானதெனக் கருதுகிறது. அதனைத் தவிர்க்கவே ரணில் பலதடவை முனைந்துள்ளார்.

அவரது வெளிநாட்டுப் பயணங்கள் அரைவாசிக்கு அதிகமானவை இந்தியாவை நோக்கியே நிகழ்ந்துள்ளது. ஆனால், எந்த தடவையும் நேரடியாகப் பொருளாதார உடன்படிக்கை எதிலும் ரணில் கைச்சாத்திடவில்லை. திருகோணமலை எண்ணெய் குதங்கள் தொடர்பான விடயத்தை யாராவது குறிப்பிடலாம். அதனை இராணுவப் பாதுகாப்புச் சார்ந்த அரசியல்ரீதியான உடன்படிக்கையாகவே ரணில் விக்கிரமசிங்க அரசு கருதியது.

ஆனால், அதற்குப் பொருளாதார அர்த்தம் கொடுத்தவர்கள் இந்தியர்களே. அதனைத் தொடர்ந்து பல முயற்சிகளில் இந்தியாவினது தலையீடு ஏற்பட்டு வருகிறது. ஏனெனில், இந்தியாவிற்குப் பாதுகாப்பு எப்படி முக்கியமோ, அப்படியே பொருளாதாரம் சார்ந்த நோக்குநிலையும் உள்ளது.

பொருளாதாரத்தைப் பிரயோகிப்பதன் ஊடாக, ஓர் அரசின் இறைமையை முறியடிக்கலாம் என்பது தற்போதைய உலக வல்லரசுகளின் வர்த்தகக் கொள்கையாக உள்ளது. அதனை இலங்கை விடயத்தில் கையாளும் இந்திய அரசு - இலங்கையின் உள்நாட்டு அரசியல் பிரச்சினைகளையும் அத்தகைய அணுகுமுறையூடாக முறியடிக்கலாம் எனக் கருதுகின்றது.

இதில், ரணில் விக்கிரமசிங்க அரசுக்கும் உடன்பாடு இருக்கிறது. ஆனால், ரணில் விக்கிரமசிங்க அரசு - மேற்கு நாடுகளினது ஆதரவையும், அவற்றின் உதவிகளையும் கொண்டு - உள்நாட்டு விடுதலைப் போராட்டத்தை முறியடிக்கலாமெனக் கருதுகின்றது. அதாவது, இந்தியாவின் பொருளாதாரத் தலையீட்டினால் முறியடிக்காது, மேற்கு சக்திகளின் பொருளாதார ஒத்துழைப்பால் முறியடிக்கலாமெனக் கருதுகின்றது. இதுவே, இந்திய அரசிற்கும் ரணில் தலைமையிலான ஐ.தே.மு. அரசிற்குமான இழுபறிக்குரிய அடிப்படையாகும். அவ்வாறு இந்தியாவைத் தலையிட இடமளித்தால், முழு இலங்கையும் இந்தியாவின் ஆதிக்கப் பொருளாதாரத்திற்குள் மூழ்கிவிடும் என்பதே அவரது எச்சரிக்கையாகும்.

அவ்வாறு மூழ்குகின்ற சந்தர்ப்பம் ஏற்பட்டால், வடக்கு-கிழக்கை மூழ்கடிக்க வைப்பதே ஐ.தே.மு. அரசின் தலைமையின் விருப்பமாகும். அதற்கு உதாரணமாக விளங்குவது திருகோணமலை எண்ணெய்க்குதமாகும். இத்தகைய எண்ணெய்க் குதங்களை இந்தியாவிற்குக் கையளித்த பின்பும், எதிர்க்கட்சிகள்-ரணிலின் அரசை வீழ்த்துவதற்கும் பல அபாய அறிவுப்புக்களை விட்டனர். அவற்றிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விடயமாகவே இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்காவின் இலங்கை விஜயம் அமைந்திருந்தது. ரணில் விக்கிரமசிங்காவைப் பாதுகாக்க - அவர் எடுத்து முயற்சியாகக் கூட அதனை மதிப்பீடு செய்யலாம். அவரது விஜயத்தின் ஒரு பகுதியாக யாழ்ப்பாணமும் முக்கியத்துவம் வகித்தது என்பதை மறந்து விடக்கூடாது. அவரது விஜயத்தைத் தொடர்ந்து, ரணிலின் இந்தியப் பயணம் நிகழ்ந்தது.



ரணில் விக்கிரமசிங்கா - இந்தியத் தலைவர்களுடன் உரையாடியபோது, ஏற்பட்ட கருத்துக்கள் சமாதான முயற்சியைத் தொடர்வதையும், சமஷ்டிக்குட்பட்ட தீர்வை விரும்புவதையும் கோடிட்டுக்காட்டியது. அதன்படி, இந்தியா-ரணலின் முயற்சிக்குப் பச்சைக்கொடி காட்டிவிட்டது மாதிரிக்கூட கருதமுடியும். அவ்வாறு இந்தியா நடந்துகொண்டதனால், ஐ.தே.முன்னணிக்கு எதிரான சக்திகள் - குறிப்பாக பொதுஜன ஐக்கிய முன்னனி, ஜே.வி.பி. என்பன-பலவீனமான சக்திகளாக மாறிவிட்டதைக் காணலாம். அவர்களுக்குத் துருப்புச்சீட்டாக இருந்த பாதுகாப்புநிலை தொடர்பான சந்தேகமும், இந்தியாவை இழுத்துப் பிரச்சினையை உருவாக்கலாம் என்ற நோக்கமும் பிசுபிசுத்துவிட்டது. இந்தியாவின் ஒத்துழைப்பு ரணிலுக்கு கிடைத்தது மட்டுமன்றி, ரணில் விக்கிரமசிங்காவின் சமாதான முயற்சியை, இந்திய ஆளும்தரப்பு ஆதரிப்பதுபோன்றே நிலைமைகள் காட்டப்பட்டுள்ளன. கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக இலங்கையிலுள்ள எதிர்க்கட்சிகள் சாதித்ததைவிட, ரணில் விக்கிரமசிங்காவின் தற்போதைய இந்திய விஜயம் அதிகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

இந்தியாவைப் பொறுத்தவரை - இலங்கையின் இறையாண்மையில் தனது பிடி தொடருவதுடன், இந்தியாவின் விருப்புக்கு அப்பால், எதனையும் அடைந்து விடக்கூடாது என்பதில் அக்கறையாகவுள்ளது. அதனை இலங்கையிலுள்ள எந்த ஆட்சியாளர் ஏற்றுக்கொள்கின்றாரோ, அவருடன் கூட்டுச்சேர இந்தியா தயாராகவுள்ளது. இந்தியத் தலைமை - ரணிலுடன் உரையாடியபோது, தெரிவித்த கருத்துக்களைப் பார்த்தால், அதீதமாகச் சமாதானத்தை விரும்பும் நாடாக இந்தியா உள்ளதென்பது புலனாகும். ஆனால், அது முற்றிலும் தவறான முடிவாகும். சமாதானம் என்பதைவிட, தனது விருப்புக்களையும், முடிவுகளையும் அமுலாக்குவதே இந்தியாவின் நோக்கமாகும். அதாவது, சமாதான காலத்தில் இந்தியாவின் ஊடுருவல், செல்வாக்கு - போர்க்காலத்தைவிட அதிகரித்துள்ளது என்பதை யாரும் இலகுவில் நிராகரித்துவிடமுடியாது. அதனால், இச்சூழலை மேலும் நீடிக்கச்செய்வதும், அதன்வாயிலாக இந்தியா தனது நலன்களை அடைவதையுமே இலக்காகக் கருதுகின்றது. அதுமட்டுமல்லாது, ஆட்சியின் தலைமையுடன் ஏற்படுத்திக்கொள்ளும் உறவினால் - சரியான, நியாயமான தீர்வு எதனையும் எட்டவிடாது தடுப்பதுடன், தீர்வுக்கான உபாயங்களைக் கண்டறியும் காலத்தை நீடிபபது இந்தியாவின் இன்னோர் தந்திரோபாயமாகும். தீவிர இந்திய எதிர்ப்பை - இலங்கையில் காட்டிய ஆட்சியாளராக முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா காணப்பட்டார்.

ஆனால், அவரது இறுதிக்காலம் - இவரை நெருக்கமான இந்திய நண்பனாக மாற்றியிருந்தது நினைவுகூரத்தக்கது. அந்தவகையில் ரணில் - இந்திய விரோதியுமல்ல. நெருக்கமான, மிகநெருக்கமான நண்பனுமல்ல. இந்த விஜயத்தின்மூலம், இந்தியாவை-ரணில் தன்பக்கம் இழுப்பதில் வெற்றி கண்டிருக்கலாம். ஆனால், அந்த வெற்றிக்குப் பின்னால் நிகழ்வுள்ள குழிபறிப்பு மிக அபாயமானது. ரணில் - இந்திய நெருக்கமானது, புலிகள் - ரணில் விரிசலுக்கு வழிவகுக்குமென இந்தியா கணக்குப் போடுகிறது. இந்த விரிசல் உள்நாட்டுப் பாதுகாப்பைத் தகர்ப்பது மட்டுமல்ல, பொருளாதார அபிவிருத்தியையும், தேசிய ஒருமைப்பாட்டையும் உடைககும் என்பது யதார்த்தமானது. அது ரணில் விக்கிரமசிங்காவின் எதிர்கால அரசியலை முடிவுக்குக் கொண்டுவந்து விடுமென்பது யதார்த்தமான விடயமாகும்.

எனவே, இந்தியா மாறிவிட்டது என்பதைவிட, இந்தியா - ரணிலை மாற்றிவிட்டதா? என்பதை முட்டிப்பார்ப்பதே அவசியமான முடிவற்ற கேள்வியாகும்.

---

## வடமராட்சியில் கால்நடைகளுக்கு

# இலவச மருந்து வழங்க வைத்திய அதிகாரி முடிவு

(வடமராட்சி கிழக்கு)

பருத்தித்துறை கால்நடை வைத்திய சாலையுடன் - தொலைபேசியூடாக பண்ணையாளர்கள் தமது பெயர் விலாசத்தை தங்களுக்கு அறிவிப்பதன்மூலம் கால்நடைகளுக்கு பண்ணையில் வைத்தே சினைப்படுத்துதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் செயற்கைமுறை சினைப்படுத்தல் மூலம், ஈன்ற கன்றுகள் அல்லது ஆட்டுக்குட்டிகளின் விபரங்களை பிறந்து 7 தினங்களுக்குள் உரிய பற்றுச்சீட்டுக்களுடன் பதிவு செய்பவர்களுக்கு, ஒரு மாத வயதில் கொடுக்கப்படும் குடற்புழு நீக்க மருந்தும் இலவசமாக வழங்க பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். (17)

சதாம் ஆதரவுப்படைகளால்

# பக்தாத்தில் இடம்பெற்ற தாக்குதலில் அமெரிக்கப் படைச்சிப்பாய் ஒருவர் பலி



பக்தாத்தின் வடகிழக்கு பல்குபா விற்கருகில் நடைபெற்ற குண்டுத் தாக்குதலில், அமெரிக்க தொடரணி இலக்கானது.

இத்தாக்குதலில், ஒரு படைவீரர் கொல்லப்பட்டும், மற்றயவர் காயப் பட்டும் உள்ளார். இத்தாக்குதலுக் குட்பட்ட வாகனம் தீப்பற்றிக் கொண் டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பதவியிலிருந்து வெளியேற்றப் பட்ட சதாமின் 'சனி' ஆதரவாளர் களின் பிரதேசத்தில், கூடுதலான தாக்குதல்கள் நடைபெறுவதாக அமெ ரிக்க இராணுவ அதிகாரி ஜோர்ஜ் கிர்போ தெரிவித்துள்ளார்.

பக்தாத்திலிருந்து 60 கிலோ மீற்றர் தூரத்தில் 'பலூஜா'வில் பாதை யோரத்தில் நடைபெற்ற குண்டுவெடிப் பில் 'பரா' படையினரொருவர் காய மடைந்தார். இவ்விடத்தில் ஞாயிற் றுக்கிமையிலிருந்து நடைபெற்றுவ ரும் ஐந்தாவது தாக்குதல் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் தர்மஸ்தாபனம்

# எயிட்ஸ் நோயாளர்களுக்கான மருந்துகளை குறைந்தவிலையில் கொள்வனவு செய்யமுடிவு



இந்திய - தென்கொரிய நாடுகளில் மருந்து தயா ரிப்பில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களிடமிருந்து 'எயிட்ஸ்' நோய்க்கான மருந்துகளை விற் பனை விலையிலிருந்து, மூன்றிலொரு பங்கு குறைக்கப்பட்ட விலையில் பெற்றுக் கொள்வதற்கு முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனின் தர்மஸ்தாபனத்தின் மூலம் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக, அந்த ஸ்தாபனத்தின் ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

இத் திட்டத்தின் மூலம் பல ஆபிரிக்க நாடுகளில் வாழும் எயிட்ஸ் நோயா ளிகள் நன்மையடை வார்கள் என, எதிர் பார்க்கப்படுவதாக தெரிவித்தார்.



பல உதவி நிறுவ ணங்கள் இத்திட்டத்தை வரவேற்றுள்ளன இதன் மூலம் எயிடஸ் நோயால் அவதியுறும் பல கோடிக்கணக்கான மக்களுக்கு உயிர் கொடுக்கமுடியும் என, உலக சுகா தார அமைப்பின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இரண்டு மில்லியன் மக்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற முடியும் என பில்கிளின்டன் தெரிவித் தார்.

தென்ஆபிரிக்காவில் நான்கு மில்லியன் மக்கள் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதில் ஐம்பதாயிரம் நோயாளிகள் மாத்திரமே மருத்துவ சிகிச்சை பெற்றுவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் உள்ள செல்வந்த நாடுகளிலிருந்து, 'கிளின்டனின் தர்மஸ்தாபனம்' நிதியை நன்கொடையா கப் பெற்றுவருகின்றது.

## உலக நோக்கு

# பலஸ்தீன போராளிகளின் தாக்குதலில் இண்டு இஸ்ரேலியப் படையினர் பலி!

(டெல்அவில்)

காஸாவில் இஸ்ரேலின் யூதர்க ளின் குடியிருப்பான 'ரென்சரின்' பிர தேசத்தினுள் ஊடுருவிய பலஸ்தீன போராளிகள் இரண்டு இஸ்ரேலிய பெண், படைவீரர்கள் உட்பட மூவ ரைக் கொலை செய்ததாக, இஸ் ரேல் செய்திகள் தெரிவித்துள் ளன.

இக்கொலைகள் துப்பாக்கிப்பிர யோகம் மூலம், இரவில் அப்பிரதேசத் திற்குள் ஊடுருவல் நடத்திய பின் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

ஊடுருவல் நடத்தியவர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலுக்கு 'கமாஸ"ம்' இஸ்லாமிய ஜிகாட்டும் இணைந்து உரிமை கோரியுள்ளன. ஏற்கனவே சமாதான ஒப்பந்தத்திற்கெதிராக 300 புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கு ஒப்பந்தகாரர்களை காஸாப்பிரதேசத் திற்கு அழைத்து வந்த பின் இந்த ஊடுருவல் சம்பவம் நடத்தப்பட்டுள் ளது.



இதன் பின் இஸ்ரேல் படையினர் நடத்திய ஆகாயத் தாக்குதலில் 11 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள் ளார்கள்.

பதில் தாக்குதல் நடத்தப்போவ தாக பலஸ்தீனிய போராளிகள் தெரிவித்துள்ளார்கள்.

சர்வதேச நாடுகளால் வழங்கவுள்ள

# ஈராக்கின் புனர்நிர்மாண நிதியின் அளவு வெள்ளிக்கிழமை வெளியிடப்படவுள்ளது!

(பக்தாத்)

ஈராக் நாட்டை மீண்டும் புனர்நிர்மாணம் செய்வதற்கு உதவி வழங்க வுள்ள நாடுகள் எவ்வளவு தொகையை வழங்கவுள்ளார்கள் என்பது தொடர்பான தகவல்களை, எதிர்வரும் வெள்ளிக் கிழமை வெளியிடத்திட்ட மிட்டுள்ளன.



உலக வங்கியின் கணிப்பின் பிரகாரம் - ஈராக் கிற்கு அதன் கட்டுமானப் பணிகளுக்கு 36 மில்லி யன் டொலர்கள் தேவைப் படுவதாகவும் ஆனால், அத்தொகையை பெற்றுக் கொள்வதில் உள்ள சிர மங்களை அண்மையில் மட்றிட்டில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுக ளின் மகாநாட்டில் தெரி யவந்துள்ளது. இதனி டையே, அமெரிக்கா 20 பில்லியன்களை வழங்க முன்வந்துள்ளது. பல வளைகுடா நாடுகளும் தமது பங்களிப்பை விரைவில் வழங்கவுள்ளன.

மட்றிட்டில் சேகரிக்கப்பட்ட நிதி, உலகவங்கி, ஐக்கிய நாடுகள்சபை மூலம் ஈராக்கியர்களால் ஆரம்பிக்கப்பட்ட அறக்கட்டளை ஒன்றின் மூலமே நிர்மானப் பணிகளுக்கு செலவிடப்படும்.













நேற்று நல்லூரில் நடைபெற்ற தேசிய தீபாவளி தின நிகழ்வில் வயலின் மேதை குன்னக்குடி வைத்தியநாதன் மேடைக்கு அழைத்துவரப்படுவதையும், அவர் இசை மழை பொழிவதையும், நிகழ்வைப் பார்வையிடும் மக்களையும் மேலுள்ள படங்களிலும், நிகழ்வு நடந்த அரங்கத்தையும், நிகழ்வில் கலந்து கொண்ட சமயப் பெரியார்களையும், தீபாவளி நினைவதின முத்திரை வெளியிடப்படுவதனை கீழுள்ள படங்களிலும் காணலாம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

நேற்றைய தினம் தீபாவளி. பல வருடங்களின் பின்னர் என்றுமில்லாத ஆரவாரத்துடன் புலம்பெயர்ந்தும், இடம்பெயர்ந்தும், வேர்விட்டு விலகியிருந்த உறவுகள், ஒன்று சேர்ந்து மகிழக்கூடிய சூழ்நிலையில் கொண்டாடப்பட்டதாக நண்பர் ஒருவர் கூறினார்.

சந்திப்பக்கம் போக முடியவில்லை. 'ஒரே வெடி' ஆர் காலுக்கு ஆர் எறிவார்களோ என்ற நிலை .இம்முறை இளைஞர்களில் பலருக்கு எல்லை மீறிய சுதந்திரம் கிடைத்திருந்தது. மதுக்கடைகள் நிரம்பி வழிந்தன... மனித உணர்வை மறந்த நிலையில், பெரும்பாலான தொலை நோக்கு சிந்தனையற்ற இளைஞர்கள் தம்நிலை தவறி நடந்ததை காணக்கூடியதாக இருந்தது.

இளைஞர்களின் 'பம்பலுக்கு' இலக்கான சில முதியவர்கள் நல்ல நாள் பெருநாளில் கெட்டவார்த்தைகளால் திட்ட வைத்து விட்டார்களே என துயரப்பட்டதையும் அவதானிக்க முடிந்தது.

எத்தனையோ மேல்வெடி, கீழ்வெடி, கண்ணிவெடிகளுக்கெல்லாம் தப்பி வந்த நாங்கள் வன்னியிலிருந்து இங்கை வந்து இந்த சீன வெடிக்குப் பயப்பிட வேண்டிக்கிடக்குதே... என்று அங்கலாய்த்தார் ஒருவர்.

விழாக்கள் எப்போதுமே மக்கள் ஒன்றுகூடி மகிழ்வதற்கானவை தான்... அது அடுத்தவரை துன்பப்படுத்தி மகிழ்வதற்கான ஒன்றல்ல என்பது எப்போது புரிந்துகொள்ளப்படுகின்றதோ அப்போதுதான் விழாக்களுக்கு அர்த்தம் இருக்கும் என்றார் ஒரு ஆசிரியர்...

-தெருவாசி

# பண்ணாக வீதியோரமாக இளைஞனின் சடலம் மீட்பு

சுழிபுரம் பண்ணாகம் பகுதியில் வீதியோரமாகாக் கிடந்த இளைஞர் ஒருவரின் சடலம் நேற்றிரவு 9.45 மணிக்கு மீட்கப்பட்டு யாழ். போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பண்ணாகம் விசுவத்தை முருகன் கோவிலடியைச் சேர்ந்த சின்னத்தம்பி சந்திரராசா (வயது 27) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவர்.

நேற்று மாலை வீட்டிலிருந்து புறப்பட்ட இவர் இரவு நெடுநேரமாகியும் வீடுதிரும்பாததால் இவரைத் தேடிச் சென்றவேளை வீதியோரமாக சடலமாகக் கிடக்கக்காணப்பட்டார்.

வாய் மற்றும் மூக்குப் பகுதிகளில் இரத்தம் வெளிவந்த நிலையில் இறந்து கிடந்த இவரது சடலம் சம்பவ இடத்திலிருந்து மீட்கப்பட்டு நேற்றிரவு 10.15 மணிக்கு பிரேதப் பரிசோதனைக்கு யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# புத்திரசிகாமணிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை!

## டி.எம்.ஜெயரத்ன தெரிவிப்பு

பொதுஜனஐக்கிய முன்னணியன் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திரசிகாமணிக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணையொன்றை நடத்தப் போவதாக, பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம்.ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

எனினும், எந்தவொரு ஒழுக்காற்று விசாரணைக்கும் தாம் தயாராக இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் புத்திரசிகாமணி தெரிவித்துள்ளார்.

இவர், பொதுஜன ஐக்கிய முன்னணியின் நடவடிக்கைக்கு எதிராக, நேற்று முன்தினம் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆசனத்தில் அமர்ந்ததாலேயே இந்த ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில், புத்திரசிகாமணி நியமனம் பெற்றுள்ளார். எனவே, அவரது செயல் குறித்து அவரிடம் காரணம் கேட்டோம். அவர் கலந்து கொண்டாலும், கொள்ளாவிட்டாலும் அவர் செய்த தவறு காரணமாகவே அவரை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட நேரிடும் என்று ஜெயரத்ன தெரிவித்துள்ளார். (01)

# ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயம்; நாடாளுமன்ற விவாதத்திற்கு இணக்கம்!

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைய இந்திய விஜயம் தொடர்பாக, நாடாளுமன்ற விவாதம் ஒன்று நடத்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

பிரதான எதிர்க்கட்சிகளின் கோரிக்கைக்கு அமைவாக, அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது. இருநாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்களை அதிகரிப்பது தொடர்பான ஒப்பந்தங்கள் குறித்தே, இந்த விவாதம் நடத்தப்படவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயம் தொடர்பாக, வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ மூன்றுபக்க அறிக்கை ஒன்றை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, பிரதமரின் விஜயத்தை வரவேற்றுள்ளது. இதுகுறித்து அந்தக் கட்சியின் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவிக்கையில் -

பிரதமரின் விஜயத்தின் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையை வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

# கண்காணிப்பு குழுவின் தலைவரை ஜனாதிபதி பதவிவிலகக் கோரியமை அரசாங்கத்திற்கு அறிவிக்கவில்லை!

## அரச ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவரை பதவி நீக்குமாறு நோர்வே பிரதமமந்திரியை ஜனாதிபதி கேட்டுள்ள போதிலும், இது தொடர்பாக, அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடத்தவில்லை என்று அரசாங்க ஊடகப் பேச்சாளர் அலுவலக செயலாளர் தெரிவித்துள்ளார்

இது தொடர்பாக, அரசாங்கத்துக்கு ஜனாதிபதி அறிவிக்கவில்லை என்றும், செயலாளர் மேலும் கூறினார்.

ஆயினும், பிரதம மந்திரியின் பணிப்புக்கமைய பாதுகாப்பு அமைச்சர் இலங்கை கடற்படையினரின் நடவடிக்கை குறித்து, விடுதலைப் புலிகளுக்கு யுத்தநிறுத்த கண்காணிப்பாளர்கள் தகவல் கொடுத்தார்களா என்பது பற்றிய விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறிப்பிட்ட கடற்படை உத்தியோகததர்களுடன் தேவையான விடயங்களைப் பெற்றுக்கொள்வதற்காக பாதுகாப்பு அமைச்சர் ஏற்கனவே திருகோணமலை சென்றிருந்தார். அவர் இலங்கை யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் கருத்துப் பரிமாற்றம் செய்துள்ளார். அத்துடன், இலஙகையில் உள்ள நோர்வே தூதுவருடனும் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

அமைச்சர் தனது அறிக்கையை விசாரணை முடிந்ததும் அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பார்.

அதன் பின்னர் மேற்கொ[illegible] எடுக்கவேண்டிய நடவடிக்கை[illegible] பற்றி அமைச்சரவை தீர்மானிக்கும் என்று, அரசாங்க ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இலங்கை கடற்படைக்கு அதன் கடமையில் இருந்து விலகியதற்கான காரணம் பற்றி, நோர்வே யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடன் பேசசுக்கள் நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதிக்கும் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்குமிடையில் பிணக்குகள் ஏற்பட்டுள்ளமை சமாதான முயற்சியைப் பாதிக்கும் என்று, அரசாங்க ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (01)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் படுகாயம்

கலட்டிப்பகுதியில் நேற்று மாலை இடம் பெற்ற, மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்த நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதே இடத்தைச்சேர்ந்த ம.சத்தியதாசன்(வயது33)என்பவரே காயமடைந்தவராவார்.

இதேவேளை, வைத்தியசாலை 24 ஆம் விடுதியில் நோயாளர் ஒருவரின் உறவினர் ஒருவருக்கும், வைத்திய அதிகாரி ஒருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் முற்றி கைகலப்பாக மாறும் நிலை ஏற்பட்டது. இதனை அடுத்து அவ்விடத்துக்கு, பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. (111)

## வீதி விபத்தில் இளைஞன் படுகாயம்

நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயிலுக்கு அருகில் நேற்றுமாலை இடம்பெற்ற, விபத்தொன்றில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார். ஆட்டோவும், மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதிலேயே, இந்த விபத்து சம்பவித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில், நல்லூரைச் சோந்த கே.கஜன் (வயது22) மோட்டார் சைக்கிள் சாரதி சிறுகாயங்களுக்கு மட்டும் உள்ளாகினார்.

## பொலநறுவை குண்டுத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலி

பொலநறுவை - அரலகன்வில பிரதேசத்தில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயார் ஆர்.பி. வைலெற், (வயது 45) தந்தை கே. சோமரட்ண (வயது 35), மகள் கே.பி.சுகந்திகா, (வயது 18) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

அரலகன்வில - பலட்டியம பிரதேசத்திலுள்ள வீடொனறிலேயே இந்த கைக்குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வீட்டுத் தோட்டத்திலிருந்து எடுத்து வரப்பட்ட கைக்குண்டொன்றை சோதனை செய்ய முற்பட்டபோதே குண்டு வெடித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை - இந்த பிரதேசத்தில் இடம்பெற்ற மற்றுமொரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்.

## பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த பலமான நாடுகளின் ஆதரவு தேவை

### லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவிப்பு

நாட்டில் பயங்கரவாதத்தை கட்டுப்படுத்துவதற்கு அமெரிக்கா போன்ற பலமான நாடு ஒன்றின் ஆதரவு பெற வேண்டிய காலம் இதுவாகும் என்று, முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் பின்பு, கொழும்பு மாநகரசபை வளாகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நாட்டின் இனநெருக்கடி குறித்து, இந்தியா வெளியிட்டுள்ள அறிக்கை இலங்கைக்கு மிகவும் சாதகமாக இருப்பதாகக் கூறினார்.

வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகம், இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாணபதற்கு வழிவகுக்கவேண்டும் என்பதை இந்தியா அழுத்தமாக கூறியிருக்கிறது.

இரு நாடுகளுக்கு இடையிலான சிறந்த உறவுகள் காரணமாக இம்மாதிரியான அறிக்கை ஒன்று விடப்பட்டது.

சமாதான முன்னெடுப்புகள் முன்கொண்டு செல்லப்படுவதை சில நாடுகள் நலல மனதுடன் ஏற்றுக்கொண்டு உதவியளிக்க முன்வந்துள்ளன. ஆனால், சில நாடுகள் உள்நோக்கத்துடன் உதவியளிக்க முன்வந்துள்ளன. கூட்டத்தில் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச உடபட பலரும் உரையாற்றினர். (01)

### சமாதான...

விக்கப்பட்டுள்ளது.

பொ.ஐ.முன்னணி வருங்காலத்தில் அமைக்கக்கூடிய அரசாங்கம் ஒன்றை நடைமுறைப்படுத்துதற்குரிய செயற்திட்டத்தையும் ஜனாதிபதி விளக்கிக் கூறியுள்ளார்.

அரசாங்க ஊழியர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்படும் என்றும், 50 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்றும், இதில் வேலையற்ற பட்டதாரிகளுக்கு நன்மை கிடைக்கும் என்றும், ஜனாதிபதி தெரிவித்தார்.

### கிண்ணியாவில்...

எம்.ஏ.எம்.மௌரூப் (ஐ.தே.மு.), எம்.எஸ். தௌபீக் (மு.கா.), கே.எம். தௌபீக் (மு.கா.) ஆகியோரின் வீடுகளே இவ்வாறு முஸ்லீம் காடையர்களால் தாக்கப்பட்டுள்ளன.

சமாதானத்தைக் குழப்பும் அரசிற்கெதிரான சக்திகளே இவ்வாறான நடவடிக்கைளை மேற்கொண்டதாகவும் அவர் குற்றஞ் சாட்டினார்.

தற்போது கிண்ணியா பிரதேசம் முழுவதும் அதிரடிப்படைப் பொலிஸாரின் கண்காணிப்பில், அமைதியாகக் காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

### சமாதானத்திற்கு...

ரத்வத்த, மங்கள சமரவீர ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை - இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்ட மக்கள் - பல்வேறு சுலோகங்களைத் தாங்கிச் சென்றனர். விடுதலைப் புலிகளுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் நாட்டைக் காட்டிக்கொடுத்த தாகுமென்ற கோஷத்தை எழுப்பிய படி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ப[illegible] இலட்சம் மக்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், ஒரு இலட்சத்துக்கு குறைவான மக்களே கலந்துகொண்டனர்.

இதேவேளை - இந்தப் பேரணியில் ஜனாதிபதி கலந்துகொள்வதாக அறிவித்த போதிலும், எதிர்பார்க்கப்பட்டளவு மக்கள் பங்கேற்காததால் இறுதி நேரத்தில் அவர் கலந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1558 திகதி: 24.10.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| B | 0 | 8 | 8 | 2 | 2 | 3 |




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.